# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 06

(2015இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படும்.)



சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 6

சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

கத்தோலிக்க திருமறை

தரம் 6

ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு 2015

C தேசிய கல்வி நிறுவகம்

ISBN

சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு
பதிப்பகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்

தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும்** : கல்விசார் அலுவல்கள் சபை,
தேசிய கல்வி நிறுவகம்

**பாட இணைப்பாளர்** : அருட்பணி. கால்டன் டி சில்வா
(விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்)

அருடபணி. றெக்ஸ் கொன்ஸ்ற்றன்ரயின்
(உதவி செயற்திட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம்)

**எழுத்தாளர் குழு** :

- முதுமாணி அருட்பணி. ஜுட் தஸநாயக்க
  விரிவுரையாளர்,
  கல்வியியற் கல்லூரி, பிங்கிரியா.

- முதுமாணி திரு. எஸ். ஜீ. கே. டி. எல். சீ. பிரசாத்
  ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம், ஹோமாகம.

- செல்வி துஷ்மந்தி டி சில்வா
  ஆசிரிய ஆலோசகர், கல்வி வலையம்,
  மிநுவன்கொடை.

- செல்வி. டி. ஐ. ஜோசப்
  ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம், கொழும்பு.

- கலைமாணி திரு. ரீ. ஐ. இரங்கநாயகம்
  ஆசிரியர், புனித அந்தோனியார் மகளீர் மகா
  வித்தியாலயம், கொழும்பு 03.

- செல்வி. ஏஞ்சல் மேரி
  ஆசிரியை, புனித அந்தோனியார் மகளீர் மகா வித்தியாலயம்,
  கொழும்பு 13.

- திருமதி. டப்லியு. கே. எம். ஐ. எஸ். கே. பர்னாந்து
  ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்.

- கலைமாணி திருமதி. தி. ஜே. போல் அன்ரனி
  ஓய்வு பெற்ற அதிபர்.

- கலைமாணி செல்வி. நா. பி. இராஜயோகினி
  ஆசிரியை, சகல புனிதர்களின் மகளீர் மகா வித்தியாலயம்,
  கொழும்பு 10.

## கத்தோலிக்க ஆலோசகர் குழு

- அதிமேதகு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை
  தலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலிய கல்வி பற்றிய ஆயர்களின் ஆணைக்குழு

- அதிமேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை
  உபதலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலிய கல்வி பற்றிய ஆயர்களின் ஆணைக்குழு

- அதிவண. ஐவன் பெரேரா
  தேசிய பணிப்பாளர்- கத்தோலிக்க பாடசாலை

- அருட்பணி. பியல் ஜானக பெரேரா
  தேசிய பணிப்பாளர் -திருவிவிலிய, மறைக்கல்வி ஆணைக்குழு

- கலாநிதி அருட்பணி. ஹென்றி சில்வா
  விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்

- கலாநிதி. அருட்பணி. ஞானமுத்து ஹெக்ரர் பிலேந்திரன்
  தலைவர்,
  மேற்கத்தேய கலாசாரம் மற்றும் கிறிஸ்தவ, இஸ்லாம் கலாசார பீடம்,
  யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

- அருட்பணி. கிறெகறி எல். பர்னாந்து
  உதவிப் பணிப்பாளர்,
  சமய பிரிவு – கல்வி அமைச்சு.

## ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துவதற்கான அறிவுரைகள்

கத்தோலிக்க நெறிக்கு ஏற்ப வளமான வாழ்வுக்கு அவசியமான தேர்ச்சிகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்வியுடன் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு இடமளித்து ஆசிரிய வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவு மையம் சார்ந்த பரீட்சை முறைகளின் கீழ் சிறந்த பெறுபேறுகளையும் அறிவையும் ஊட்டுகின்ற கல்வி முறையானது சிறந்தது அல்ல என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். கல்வியின் மூலம் உள்ளமும் கைகளும் ஊட்டம் பெற வேண்டும். இந்த இலக்கை நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியில் இவ் ஆசிரியர் வழிகாட்டி நூலானது தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆசிரியர் வழிகாட்டியானது பாட நூலுக்கும் பாடத்திட்டத்திற்கும் ஏற்ப எழுதப்பட்டுள்ளது. எனவே கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை இந்த வரையறைக்குள் ஒழுங்கமைத்துக் கொள்வது எமது கடமையாகும்.

- பாட பிரவேசமானது மிக முக்கியமானதாகையால் மாணவரின் ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடத்தை ஆரம்பியுங்கள்.
- பாட பிரவேசத்திற்கும் பாட விருத்திக்கும் அவசியமான தர உள்ளீடுகளை பயன்படுத்துங்கள்.
- மாணவரை சிறு குழுக்களாக பிரித்து குழு செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உசிதமான இடத்தினை தெரிவு செய்யுங்கள்.
- கற்றல் பேறுகளில் மாணவரின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் செயற்படுங்கள்.
- மாணவரின் விசுவாசத்தை விருத்திசெய்வதற்கு உறுதுணையாக இருங்கள்.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் கட்டாயமானதல்ல. அதற்கு வேறு முறைகளையும் பொருத்தமான வகையில் பாவிக்கலாம். இருப்பினும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் முக்கியமானதாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் கிறிஸ்தவ மத விழுமியங்களை வளர்ப்பதிலும் பிரயோகிப்பதிலும் அதிக கவனத்தைச் செலுத்துங்கள். பாட ஆரம்பம் முதல் இறுதிவரை கணிப்பீடு செய்வதுடன் ஆற்றல், ஆற்றலற்ற நிலைக்கேற்ப பின்னூட்டல் மற்றும் முன்னூட்டலை பெற்றுக்கொடுக்க வேண்டும். நேர அட்டவணை தயாரிக்கும் போது இரண்டு பாடவேளைகளும் அடுத்தடுத்து அமையாது பாடத்தை நெறிப்படுத்துவது உங்களுடைய பொறுப்பாகும்.

பாடத்திற்கு எதிர்ப்பார்க்கப்படும் மதிப்பீட்டு கணிப்பீட்டு நியதிகளுக்கு ஏற்றவாறு பாடத்தை தயார்செய்யுங்கள். மதிப்பீட்டின்போது புள்ளி வழங்கும் முறைகளை மாணவருக்கு முன்னரே அறிவியுங்கள். நீங்கள் மாணவருக்கு வழங்கும் பயிற்சிகளை பிழையின்றி பரிசீலனை செய்துகொள்ளுங்கள்.

பாடங்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுச்சூழல் என்ற பகுதியானது பெற்றோர் முதியோரின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுதல் உகந்தது. அதற்கான அறிவுரைகளை அதிபர், பாட ஆசிரியர் மூலமாக பெற்றோர்களுக்கும் முதியோருக்கும் வழங்குதல் வேண்டும்.

**அருட்தந்தை கார்ல்டன் டி ஜோசப் சில்வா**

**(விரிவுரையாளர்)**

**செயற்றிட்ட தலைவர்**

**தேசிய கல்வி நிறுவகம்.**

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| கலைத்திட்டக் குழு | v |
| ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | vii |
| பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் | ix- xxii |
| கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கான வழிகாட்டல் | 1-66 |

## அறிமுகம்

சமயம் என்பது வாழ்க்கை. எனவே சமயத்தை வாழ்க்கையிலிருந்து பிரிக்கமுடியாது. அனைத்து சமயங்களினதும் நோக்கம் ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்குவதே ஆகும். இக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டே இக் கலைத் திட்டம் திருத்தியமைக்கப் பட்டுள்ளது. இதற்கேற்ப இப் புதிய கலைத் திட்டத்தில் உள்ள தேர்ச்சிகளை மாணவரிடையே உருவாக்குவதே இதன் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளது.

தேர்ச்சி என்பது அறிவு, மனப்பாங்கு, திறன், ஆளிடைத்திறன் என்பவற்றை ஒன்றிணைத்த ஒரு வாழ்க்கை முறையாகும்.

கிறிஸ்தவராகிய நாம் ஏற்றுக்கொள்ளும் அன்பை மையமாகக் கொண்ட இயேசுவின் படிப்பினையையே, கல்வித்தத்துவவியலாளர்கள் ஆளிடைத்திறன் என விளக்குகின்றார்கள். எனவே உன்னத ஆசிரியரான நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் படிப்பினைகளை நன்கு அறிந்து, கிறிஸ்தவ மனப்பாங்கை விருத்தியடையச் செய்து திறமை மிக்க அன்பு நிறைந்த ஒரு வாழ்வை கட்டியெழுப்புவதே இப் புதிய கலைத்திட்டத்தின் அடிப்படை அம்சமாகும்.

கிறிஸ்தவ படிப்பினைகள் திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. ஏனைனில் கிறிஸ்தவ நம்பிக்கை, எதிர் நோக்கு, அன்பு என்பன திருவிவிலியத்தையே மையமாகக் கொண்டுள்ளது. ஆகையால் இக் கத்தோலிக்க கலைத்திட்டமும் திருவிவிலியத்துடனே ஆரம்பிக்கின்றது. மேலும் திருத்தந்தை தூய இரண்டாம் யோண் பவுலினால் குறிப்பிட்ட விசேட குழுவினரால் வடிவமைக்கப்பட்ட “ கத்தோலிக்க திருமறைக்கல்வி” (Catechism of the Catholic Church) எனும் நூலின் தலைப்பிற்கேற்ப ஏனைய தலைப்புகள் நான்கும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப பின்வரும் ஐந்து தலைப்புகள் இக் கலைத்திட்டத்தில் உள்ளடங்கி உள்ளது.

1. திருவிவிலியம்
2. விசுவாசம்
3. அருளடையாளம்
4. பத்துக்கட்டளை
5. செபவாழ்வு

மேற்கூறப்பட்ட தலைப்புகள் ஐந்துக்கேற்ப அமைக்கப்பட்ட ஐந்து தேர்ச்சிகளூடாக, 6-11 வகுப்பு வரையிலான மாணவர் உச்ச பயன் அடைவதை எதிர்ப்பார்க்கப் படுகின்றது. இதன் வழியாக திறமைமிக்க, முதிர்ச்சியடைந்த, செயல்திறன்மிக்க ஒரு கத்தோலிக்க பிரஜையை உருவாக்குவதே நோக்கமாகக் கருதப்படுகின்றது.

அதற்காக 6-9 வகுப்புகளில் அடிப்படை வாழ்க்கை முறையையும், 10-11 வகுப்புகளில் ஒரு முதிர்ச்சி பெற்ற கத்தோலிக்க மாணவனாக செயல்படவும் தேவையான தேர்ச்சிகளை உருவாக்குவது இதன் எதிர்ப்பார்ப்பாகும்.

ஏனெனில் உயர்தர வகுப்புகளில் மிகக் குறைந்தளவு மாணவர்களே கிறிஸ்தவம், கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்கின்றார்கள். எனவே பெரும்பாலான மாணவர்களினது கிறிஸ்தவ கல்வி அறிவு க.பொ.த. (சா/த) கலைத்திட்டத்துடன் வரையறுக்கப்படுகின்றது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்களை மேலும் விருத்தி செய்து, உரிய தேர்ச்சிகளை மாணவர்களிடம் உருவாக்க மாணவர் மைய கல்விச் செயற்பாடுகளை அமைக்க வளவாளராகச் செயற்படுவதே ஆசிரியர்களது கடமையாகும்.

கிறிஸ்தவ விழுமியங்கள் கத்தோலிக்க ஆசிரியரது வாழ்வில் பிரதிபலிக்கப்படுவதை மாணவர்கள் கண்டுணர வேண்டும். எனவே சமயக் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறந்த ஒழுக்காற்றல் கொண்டவர்களாக் திகழ்வது சாலச் சிறந்தது.

## தேசிய குறிக்கோள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துதல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |

**2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

**7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை **முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.**

மேற்குறிப்பிட்ட தேசிய கல்விக் குறிக்கோள்களும், அடிப்படைத் தேர்ச்சிகளும் இலங்கையின் கல்வி தொடர்பாக தேசிய கொள்கைகள், மற்றும் பிரேரணைகளை உள்ளடங்கிய தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2003 ஆம் ஆண்டு மார்கழி மாத அறிக்கையிலிருந்து பெறப்பட்டதாகும்.

## விடயக் குறிக்கோள்

1. தமது வாழ்வை உருவாக்க திருவிவிலியத்தை ஆதாரமாகக் கொள்வர்.
2. படைப்பிலே மிக உன்னத படைப்பான மனிதனை படைத்தவரை அறிந்துக் கொள்வர்.
3. கிறிஸ்துவினுடைய தூதுப் பணியையும் அவருடைய அனுபவங்களையும் ஏற்றுக் கொண்டு முழுமையான கிறிஸ்தவராக வாழ்வர்.
4. இறைவார்த்தை, அருளடையாளங்கள், பொதுவழிபாடுகள் வழியாக ஊட்டம் பெற்று கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்றுபகர்வர்.
5. மறையைக் கற்றலும் வாழ்தலும் ஒரே செயன்முறை என்பதை விளங்கிக் கொள்வர்.
6. இறைகட்டளைகளையும், மலைப்பொழிவின் படிப்பினைகளையும் அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ விழுமியங்களை தமது வாழ்வில் வாழக் கற்றுக் கொள்வர்.
7. செபத்தின் வல்லமையால் ஊட்டப்பெற்று இறை வரப்பிரசாதங்களை அனுபவிப்பர்.
8. தமது சமூகத்தில் பல்வேறு செயற்பாடுகளால் கிறிஸ்துவின் அளவு கடந்த அன்பை பரப்புவர்.
9. தம்மைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலானது இறைவனால் வழங்கப்பட்ட கொடை என்பதை உணர்ந்து, அதனை பாதுகாத்து, விருத்தி செய்வதற்கான ஆற்றலையும் அறிவையும் பெறுவர்.
10. ஒழுக்க விழுமியங்களையும், மனிதமாண்பையும் பேணிக்காத்து கிறிஸ்துவுக்குரிய பண்புகளோடு உயிருள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுவர்.
11. கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாப்பதோடு, ஏனைய மதங்களையும் மதித்து வாழப் பழகுவர்.
12. இலங்கை பிரஜை என்ற வகையில் தமது நாட்டின் மீது பற்றையும், மதிப்பையும் வளர்த்துக்கொள்வர்.

## விடயத்திற்குரிய தேர்ச்சிகள்

1. திருவிவிலியம் தொடர்பான முழுமையான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பயனுள்ள முறையில் பயன்படுத்துவர்.
2. இறைவெளிப்பாட்டை தமது வாழ்வில் செயற்படுத்தும் முகமாக விசுவாச வாழ்வு வாழ்வர்.
3. அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் ஒன்றித்து முழுமையான கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்றுபகர்வர்.
4. இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பு வாழ்வு வாழ்வர்.
5. செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும், மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர்.

## 6.1.4. பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர். | 6.1.1 திருவிவிலியத்தின் நூல்களைப் புரட்டிப் பார்த்து அறிந்து கொள்வர். | **பாடம் 1 : திருவிவிலியம்**<br>• திருவிவிலியம் பற்றிய அறிமுகம்<br>• இறைவனின் புனித நூல்<br>• திருவிவிலியத்தின் பிரிவுகள்<br>• திருவிவிலியம் பற்றிய சுருக்கமான விபரம்<br>- பழைய ஏற்பாடு<br>- புதிய ஏற்பாடு<br>(46 + 27) = 73 | • திருவிவிலியத்தின் இரு முக்கிய பிரிவுகளைச் சேர்ந்த நூல்களையும் கோவைப்படுத்துவர்.<br>• திருவிவிலியத்தை மரியாதையுடன் வீட்டில் அரங்கேற்றி வைக்கக் கூடிய முறை பற்றிய ஆலோசனைகளை முன்வைப்பர்.<br>• திருவிவிலிய நூல்களை கணப் பொழுதில் பிழையின்றிப் புரட்டுவர்.<br>• திருவிவிலியத்தை மரியாதையுடன் பயன்படுத்துவர்.<br>• குழு ஆய்வுக்கான உதவிகளைப் பெற்றுக்கொடுப்பர். | 02 |
| | 6.1.2 சட்ட நூல்களை ஊக்கத்துடன் பயன்படுத்துவர். | **பாடம் 2 : பஞ்சாகமம்**<br>• பஞ்சாகம நூல்கள்<br>• அதன் வேறு பெயர்கள் - சிறுவிளக்கம்<br>• சிறு விளக்கம்<br>• தொடக்க நூல்<br>• விடுதலைப் பயணம் உள்ளடங்கும் விடயங்கள். | • சட்ட நூல் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.<br>• இறையன்புக்குப் பிரதி அன்பு காட்ட வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• சட்ட நூல் பற்றிய சுவரொட்டி ஒன்றை ஆக்குவர்.<br>• சட்ட நூலை வாசிக்க விரும்புவர்.<br>• குழுக்களுக்கிடையே அன்பாகச் செயற்படுவர். | 02 |
| | 6.1.3 நற்செய்தி நூல்களைக் கற்பர். | **பாடம் 3 : நற்செய்தி**<br>• நான்கு நற்செய்தி நூல்கள்<br>• நற்செய்தியாளர்கள்<br>• அடையாளங்கள். | • நற்செய்தி நூல்கள் நான்கினையும் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.<br>• நாம் ஒவ்வொருவரும் பிறருக்கு ஓர் நற்செய்தியாக வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• நற்செய்தி பற்றிய ஆக்கமொன்றை முன்வைக்க முயல்வர்.<br>• நற்செய்தியை அன்றாட வாழ்வில் பயன்படுத்துவர்.<br>• குழுவினரின் பங்களிப்போடு செயற்பாடுகளில் ஈடுபடுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 2.0 இறை வெளிப்பாட்டுக்குப் பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர். | 6.2.1 இறைவனின் படைப்பை மதிப்பர். | **பாடம் 4 : உலகப் படைப்பின் செய்தி**<br>• படைப்பின் ஒழுங்குமுறை.<br>- தொ.நூ 1:1 - 2:4<br>- இறை படைப்பை மதிப்பர்.<br>- தி.பா.: 104 | • ஒவ்வொரு நாள் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.<br>• இறைவன் உலகத்தை படைத்தார் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• இறைவனின் ஒவ்வொரு நாள் படைப் பையும் ஆக்கபூர்வமாக முன்வைப்பர்.<br>• இறைவனின் படைப்பை மதிப்பர்.<br>• குழச் செயற்பாடுகளின் போது ஒத்துழைப்பு நல்குவர். | 02 |
| | 6.2.2 இறைவனின் படைப்பைப் பாதுகாப்பதோடு இறைவனுக்கு நன்றி கூறுவர். | **பாடம் 5 : படைப்பின் பல்வேறு தன்மை**<br>• இறை படைப்பின் பயன்கள்<br>- மகிமைப்படுத்தல்<br>- இறைவனின் படைப்பைப் பாதுகாத்தல். தொ.நூ2:15, தொ.நூ1:28-29 | • படைப்பைப் பாதுகாக்கக் கூடிய செயற் பாடுகளைக் கோவைப்படுத்துவர்.<br>• இறைவனின் படைப்பைப் பாதுகாக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• இறைவனின் படைப்பைப் பாதுகாப்பதில் மனிதனின் இயலாமையை ஆக்க பூர்வமாக முன்வைப்பர்.<br>• படைப்பைப் பாதுகாக்க முன்வருவர்.<br>• பாடசாலை சூழலை அழகாக அமைப்பதற்கு ஒற்றுமையாகச் செயற்படுவர். | 02 |
| | 6.2.3 ஒருவருக் கொருவர் மதிப்பளித்து அமைதியுடனும் ஒத்துழைப்புடனும் வாழ்வர். | **பாடம் 6: உன்னதபடைப்பு**<br>• உன்னத படைப்பு - மனிதன் தொ.நூ1: 28-29<br>• இறைசாயலாக படைக்கப்பட்டவன் தொ.நூ1:27-28<br>• உயிர் மூச்சைக் கொடுத்தல்.<br>• மிருகங்களுக்குப் பெயரிடுதல் தொ.நூ 2:7<br>- பல்வேறுபட்ட தன்மைகளோடு படைக்கப்பட்ட மனிதன்.<br>- ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளல். தொ.நூ 2:21-23. | • மனித மாண்பை எடுத்துக் காட்டும் கருத்துக்களைக் கோவைப்படுத்துவர்.<br>• தனியாள் வேறுபாட்டை மதிக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• மனித மாண்பை காட்டும் ஆக்கங்களை முன் வைப்பர்.<br>• ஒருவருக்கொருவர் மதிப்பளித்து ஒத்துழைப்புடனும் அமைதியுடனும் வாழ்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வர்.<br>• பிறர் கருத்துக்களுக்கு செவிமடுப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 6.2.4 அன்றாட வாழ்வின் மூலம் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவர். | **பாடம் 7 : இயேசுவின் பிறப்பு**<br>• கிறிஸ்துவின் பிறப்பு (லூக். 2: 1-7)<br>• இடையருக்கு அறிவித்தல் (லூக் 2: 8-20)<br>• வானத்தூதர்களின் வருகை<br>• அரசர்களின்/ஞானிகளின் வருகை (மத் 2: 1-12)<br>• விருத்தசேதனமும் பெயரிடலும் (லூக் 2:21) | • இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் முதல் 40 நாட்களைப் பற்றி விளக்குவர்.<br>• எவ்வேளையிலும் இறைவனைப் புகழ வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• இயேசு கிறிஸ்துவின் பிறப்புப் பற்றிய தகவல்களை ஆக்கப்பூர்வமாக முன்வைப்பர்.<br>• இறை விருப்பத்திற்கேற்ப செயற்பட பழகுவார்.<br>• குழுவினரின் ஒத்துழைப்புடன் செயற்படுவர். | 02 |
| | 6.2.5 ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்வர். | **பாடம் 8 : இயேசுவின் பிள்ளைப்பருவம்**<br>• காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல். (லூக் 2:22-24)<br>• குழந்தை யேசுவிடமிருந்து பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும் படிப்பினைகள்.<br>• இயேசு ஆலயத்தில் காணாமல் போதல் (லூக் 2:42-51) | • இயேசு கிறிஸ்துவின் பிள்ளைப் பருவத்தைப் பற்றிய தகவல்களை கோவைப்படுத்துவர்.<br>• இயேசு கிறிஸ்து அனைவராலும் விரும்பதக்கவராக வாழ்ந்தா என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• இயேசு கிறிஸ்து கோவிலில் காணாமற் போன நிகழ்வை நடித்துக் காட்டுவர்.<br>• இயேசு கிறிஸ்துவின் பிள்ளைப்பருவ வாழ்வை முன் மாதிரியாகக் கொண்டு வாழ்வர்.<br>• தனது குடும்பத்தில் உள்ளவர்களுடன் ஒத்துழைப்புடன் வாழ்வர். | 02 |
| 3.0 அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக் கொண்ட புதுவாழ்வுக்குச் சான்று பகர்வர். | 6.3.1 பக்தியுடனும் ஆர்வத்துடனும் அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வர். | **பாடம் 9 : அருளடையாளங்கள்**<br>அருளடையாளங்கள் அறிமுகம்.<br>அருளடையாளங்கள் என்றால் என்ன?– இறையருள் என்றால் என்ன?<br>• அருளாடையாளங்களின் வகைகள்.<br>• அருளாடையாளங்கள் 7<br>• அழியாத முத்திரை பதிக்கப்படும் அருளடையாளங்கள். | • அருளடையாளங்கள் என்றால் என்ன என்பதை விளக்குவர்.<br>• அருளடையாளங்களின் வழியாக இறையருளைப் பெறுவதற்கு முயற்சி செய்வர்.<br>• அருளடையாளங்களைப் பற்றி ஆக்கப் பூர்வமான கருத்துக்களை முன்வைப்பர்.<br>• அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்ள உற்சாகத்துடன் செயற்படுவர்.<br>• நண்பர்களை அருளடையாளங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்கு ஊக்குவிப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 6.3.2 திருமுழுக்கினால் பெற்ற புதுவாழ்வை வளர்த்துக் கொள்வர். | **பாடம் 10 : புகுமுக அருளடையாளங்கள்.**<br>• திருமுழுக்கு<br>- திருமுழுக்கினால் கிடைக்கும் கொடைகள்.<br>- அருளடையாங்களை வழங்குதல். (நீர், வெள்ளைத்துணி, பாஸ்கா, மெழுகுவர்த்தி, திருத்தைலம் பூசுதல்)<br>• நற்கருணை<br>- இறுதி இராவுணவின் போது நற்கருணையை ஏற்படுத்தல்.<br>• உறுதிப்பூசுதல்.<br>- பெந்தக்கோஸ்து நிகழ்வின் விளக்கம்.<br>- நாங்களும் அவ்வாறு தூய ஆவியைப் பெற்றுக் கொள்ள முடியும். | • ஆரம்ப அருளடையாளங்கள் பற்றிய தகவல்களை சேகரிப்பர்.<br>• அருளடையாளங்களின் வழியாக கிறிஸ்தவ வாழ்வு ஊட்டம் பெறுகின்றது என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• சேகரித்த கருத்துக்களை முன்வைப்பர்.<br>• தாம் பெற்ற புது வாழ்வை விருத்தி செய்வர்.<br>• நித்தமும் நற்கருணையைப் பெறுவதற்கு நண்பர்களை தூண்டுவர். | 03 |
| | 6.3.3 அருளடையாளங்கள் வழியாக ஆன்மீக உடல் சுகத்தைப் பெறுவர். | **பாடம்11 : குணமளிக்கும் அருளடையாளம்**<br>• ஒப்புரவு அருளடையாளம்<br>- ஏற்படுத்துதல் (யோவா 20:22-23)<br>- கிடைக்கும் நன்மைகள்.<br>- பெறவேண்டிய சந்தர்ப்பங்கள்.<br>- செய்யும் முறை<br>• நோயில் பூசுதல் அருள் அடையாளம்.<br>- கிடைக்கும் நன்மைகள்.<br>- பெறவேண்டிய சந்தர்ப்பங்கள்.<br>- நோயாளியை ஆயத்தம் செய்தல்<br>- நோயாளி இருக்கும் இடத்தை ஆயத்தம் செய்தல். | • குணமளிக்கும் அருளடையாளங்கள் பற்றிய தகவல்களைக் கோவைப் படுத்துவர்.<br>• குணமளிக்கும் அருளடையாளங்கள் வழியாக சுகம் கிடைக்கும் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• நோயில் பூசுதல் அருளடையாளத்தைப் பெற இருக்கும் இடத்தினை ஆயுத்தம் செய்வர்.<br>• பொருத்தமான சந்தர்ப்பங்களில் நோயில் பூசுதல் எனும் அருளடையாளத்தைப் பெறுவர்.<br>• நோயாளிகளைப் பற்றி பங்குத் தந்தையிடம் அறிவிப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 6.3.4 பங்கிலும் குடும்பத்திலும் தமது பொறுப்புக் களையும் கடமைகளையும் ஒழுங்கு முறையுடன் நிறைவேற்றுவர். | **பாடம் 12 : பணி வாழ்வின் அருளடையாளங்கள்**<br>• குருத்துவம் (லூக் : 22: 19)<br>- குருக்களின் பணிகள் பொதுநிலையங்களால் குருக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள்.<br>• திருமணம்<br>- ஏற்படுத்தல் (தொ.நூ 2:18, 2: 24) மாற்கு 10: 6-9<br>- குடும்பத்தில் பிள்ளைகளின் கடமைகளும் பொறுப்புக்களும் (சீராக் 3:16,7:27-28) (கொலோ3:20, எபேசி6:1) | • பணிக்காக அமைக்கப்பட்ட அருளடை யாளங்கள் பற்றி விளக்குவர்.<br>• தமது பெற்றோருக்கு உதவுவதற்கு முன்வருவர்.<br>• குடும்பத்தில் பிள்ளைகளின் பொறுப்புக்கள், கடமைகள் பற்றிக் கோவைப்படுத்திய கருத்துக்களை ஆக்கமாக முன் வைப்பர்.<br>• பங்குப் பணிகளில் பங்குபற்றுவர்.<br>• தமது பங்குத் தந்தைக்கும் பெற்றோருக்கும் மதிப்பளிப்பர். | 03 |
| 4.0 இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து | 6.4.1 பத்துக் கட்டளைகளின் படி தமது வாழ்வை அமைத்துக் கொள்வர். | **பாடம் 13 : பத்துக் கட்டளைகள்**<br>• பத்துக் கட்டளைகள் அறிமுகம் வி.ப. 20: 3-17 இ.ச. 5: 6-2<br>• பத்து கட்டளைகள் கொடுக்கப்பட்ட பின்னணி வி.ப 31:18, 34:28, இ.ச : 4:13-14, 5:22<br>• பத்து கட்டளைகள், பத்துக் கட்டளைகளின் இரண்டு கட்டளைகள். வி.ப :20:3 -17 இ.ச. 5:1-21<br>• ஒவ்வொரு கட்டளைகளையும் ஒழுங்கு முறையாக பெயரிடுதல். பெரியகுறிப்பிடம். 296 | • இறைவன் மோசேக்கு பத்துக்கட்டளை களைக் கொடுத்த வழிமுறைகள் பற்றிய விடயங்களைத் தொகுப்பர்.<br>• பத்துக்கட்டளைகளின் படி வாழ வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• பத்துக்கட்டளைகளின் படிப்பினைகளை ஆக்கமொன்றின் மூலம் முன்வைப்பர்.<br>• ஒழுக்கமுள்ளவராக வாழ்வர்.<br>• சகோதர அன்புடன் செயற்படுவர். | 02 |
| | 6.4.2 ஒரே கடவுளுக்கு மட்டுமே தமது ஆராதனையைச் செலுத்துவர். | **பாடம் 14 : இறை அன்பு**<br>• முதல் இரண்டு கட்டளைகள்.<br>• கட்டளைகளின்படி செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவை. | • முதல் இரண்டு கட்டளைகளையும் முழுமையாக கடைப்பிடிப்பதற்கான செயற்பாடுகளைத் தொகுப்பர்.<br>• பிற சமய ஆராதனைகளில் ஈடுபடாதிருக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• முதல் இரு கட்டளைகளுக்கு எதிரான செயல்களை ஒரு ஆக்கமாக சமர்ப்பிப்பர்.<br>• ஒரே இறைவனை மட்டும் ஆராதிப்பர்.<br>• பிற சமயங்களுக்கு மதிப்பளிப்பர். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 6.4.3 ஞாயிறு தினத்திலும் கடன் திருநாட்களிலும் திருப்பலியில் பங்கு கொள்வர். | **பாடம் 15 : ஞாயிறு தினத்தைத் தூய்மையாகக் கடைப்பிடிப்போம்**<br>• 3ஆம் கட்டளை<br>- செய்ய வேண்டியவை வி.ப : 28: 8 - 11<br>- செய்யக் கூடாதவை<br>• கடன் திருநாட்களும் அதற்குரிய தினங்களும். | • ஞாயிறு தினத்தை புனிதமாக அனுசரிக்க செய்ய வேண்டிய நற்செயல்களை தொகுத்துக் கூறுவர்.<br>• ஞாயிறு தினத்தை புனிதமாக அனுசரிக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• ஞாயிறு தினத்தில் செய்யக் கூடாதவைகளை ஆக்கமொன்றினால் முன்வைப்பர்.<br>• ஞாயிறு தினத்திலும் கடன் திருநாட்களி லும் முழுத்திருப்பலியில் பக்தியுடன் பங்குக்கொள்வர்.<br>• நண்பர்களுடன் ஞாயிறு திருப்பலியில் தவறாது பங்குக்கொள்வர். | 02 |
| | 6.4.4 அயலவர்களை அன்பு செய்து வாழ்வர். | **பாடம் 16 : சகோதர அன்பு**<br>• மிகுதி ஏழு, கட்டளைகள் (5,6,7)<br>• கட்டளை 5,7,8<br>• சிறு விளக்கம்.<br>• செய்ய வேண்டியவை<br>செய்யக் கூடாதவை | • 5ம், 7ம், 8ம் கட்டளைகளால் கூறப்படும் செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவைகளை அட்டவணைப் படுத்துவர்.<br>• எப்போதும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• அட்டவணைப் படுத்திய தகவல்களை ஆக்கமொன்றின் மூலம் முன்வைப்பர்.<br>• சகோதர அன்புடன் வாழ்வர்.<br>• பிறரை மதித்து வாழ்வர். | 03 |
| | 6.4.5 நமக்கெதிராகக் குற்றம் செய்தோரை மன்னித்து வாழ்வர். | **பாடம் 17: பகைவரை அன்பு செய்தல்**<br>• மோசேயின் சட்டம் - மத் 5: 38-41<br>• பகைவரை அன்பு செய்தல். -மத் 5: 43-48<br>• இயேசு சிலுவையில் மன்னித்தல். - லூக் 23/34<br>• ஸ்தேவான் மன்னித்தல். - தி.ப 7/60<br>• திருத்தந்தை இரண்டாம் யோண் பவுல் அலி அக்ஹாவை மன்னித்தல். | • பகைவரை மன்னித்தல் தொடர்பான தகவல்களையும் படிப்பினை களையும் தொகுப்பர்.<br>• பகைவரை மன்னிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• தொகுத்தவற்றை ஆக்கமொன்றினால் முன்வைப்பர்.<br>• பகைவரை அன்பு செய்வர்.<br>• பகைவர்களையும் நண்பர்களாக மாற்றுவர். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 6.4.6 திருச்சபையின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பர். | **பாடம் 18 : திருச்சபையின் கட்டளைகள்**<br>• திருச்சபையின் கட்டளைகள் ஐந்து<br>• ஒவ்வொரு கட்டளைகளையும் அறிமுகம் செய்தல். | • திருச்சபையின் கட்டளைகள் பற்றிய தகவல்களைத் தொகுத்துக் கொள்வர்.<br>• திருச்சபையின் கட்டளைகளை பின்பற்ற வெண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• தொகுத்தவற்றை ஆக்கப்பூர்வமாக முன்வைப்பர்.<br>• திருச்சபையின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பர்.<br>• திருச்சபையின் தாபரிப்புக்கு உதவுவர். | 01 |
| 5.0 செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர். | 6.5.1 ஊக்கத்தோடு செபிப்பர். | **பாடம் 19 : செபம்**<br>• செபம் என்றால் என்ன?<br>• உவமைகள்<br>- நள்ளிரவில் அப்பங்கேட்ட நண்பன் (லூக்-11:5 -8)<br>- நேர்மையற்ற நடுவனும் கைம்பெண்ணும் (லூக்18:1-8)<br>- பரிசேயனும் ஆயக்காரனும் (லூக்- 18: 9-14) | • இடைவிடாமலும் தாழ்மையோடும் செபிப்பதன் முக்கியத்துவம் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.<br>• இடைவிடாமல் செபிப்பதன் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்வர்.<br>• கோவைப்படுத்திய கருத்துக்களை ஆக்கபூர்வமாக முன் வைப்பர்.<br>• செபிக்கும் போது சரியான முறையை (கைகளைக் கூப்பிச் செபித்தல் போன்ற) பயன்படுத்துவர்.<br>• அன்றாட வாழ்வில் பிறரை இழிவாக கருதமாட்டார்கள். | 02 |
| | 6.5.2 நாள்தோறும் செபிப்பர். | **பாடம் 20 : செபிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள்**<br>• யேசு செபித்த சந்தர்ப்பங்கள்<br>- திருமுழுக்கு பெறும்போது. - (லூக் 3:21)<br>- தனித்திருந்து செபித்தார் - (லூக் 5:16)<br>- திருத்தூதர்களை தெரிவு செய்யும்போது செபித்தார் (லூக் 6:12)<br>- பேதுருவின் விசுவாச அறிக்கைக்கு முன் (லூக் 9:18) | • இயேசு செபித்த சந்தர்ப்பங்களை விளக்குவர்.<br>• எந்தவொரு அலுவல்களையும் செய்ய முன்னர் செபிக்க வேண்டு மென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திருச்சபையின் மரபு வழிச்செபங்களை மனப்பாடமாக உச்சரிப்பர்.<br>• திருச்சயையின் மரபு வழிச்செபங்களை விசுவாசத்துடன் உச்சரிப்பர்.<br>• பிறர் கருத்துகளுக்குச் செவிமடுப்பர். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | - தோற்றம் மாற்றுவதற்கு முன் (லூக் 9/28)<br>- திருத்தூதர்களுக்கு கற்றுக்கொடுக்க முன் (லூக் 11/1)<br>- கெத்சமனி தோட்டத்தில் (லூக் 22: 42)<br>- இயேசு சிலுவையில் (லூக் 23/34, 46)<br>- சிலுவையில் மன்னித்த போது<br>- ஆவியை ஒப்படைத்தபோது (லூக் 23/43)<br><br>• செபிக்கும் சந்தர்ப்பங்கள்.<br>- காலையில் எழுந்தவுடன்<br>- பாடசாலை செல்லும் முன் பயணம் செல்லும் முன் - காவல் தூதரின் செபம்.<br>- உணவு உண்பதற்கு முன் செபம்.<br>- உணவு உண்ட பின் நன்றிச் செபம்.<br>- முக்கிய செயல்களை ஆரம்பிக்கு முன் - தூய ஆவியானவருக்கு செபம்.<br>- நித்திரைக்கு செல்லுமுன் - இராச் செபம். | | |
| | 6.5.3 இயேசு கற்பித்த செபத்தை அர்த்தமுள்ள முறையில் செபிப்பர். | **பாடம் 21 : யேசு கற்பித்த செபம்**<br>• மத் 6 : 9 – 13 லூக் 4 /2-4<br>• இரண்டு பகுதிகள்.<br>I. புகழ்ச்சி பற்றிய வேண்டுதல்கள் மூன்று<br>II. உடல் உளத் தேவைகளுக்குரிய வேண்டுதல்கள் நான்கு<br>• செபத்தின் அமைப்பு<br>• மனனம் செய்தல். | • இயேசு கற்பித்த செபத்தைப் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.<br>• இயேசு கற்பித்த செபத்தைப் பக்தியோடு சொல்வதற்கு முயற்சிப்பர்.<br>• இயேசு கற்பித்த செபத்தைப் பக்தியோடு செபிப்பர்.<br>• இயேசு கற்பித்த செபத்தைச் சொல்லும் போது சரியான நிலைகளை வெளிக்காட்டுவர்.<br>• தீமை செய்யாதிருக்க செயற்படுவர். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 6.5.4 அருள் நிறை மரியே என்ற செபத்தை பக்தியுடன் செபிப்பர். | **பாடம் 22 : அருள் நிறை மரியே**<br>• இரண்டு பகுதிகள்.<br>I. மங்கள வார்த்தை கூறல்.<br>II. திருச்சபையினால் சேர்க்கப்பட்டவை லூக்:/26-38, 1 : 26 - 38<br>• மரியன்னையின் காட்சிகள்.<br>• கத்தோலிக்க வழிபாடுகளில் மரியன்னைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம்.<br>• மரியன்னையின் வேறு பெயர்கள்.<br>• அருள் நிறை மரியே செபத்தை மனனம் செய்தல். | • மரியன்னையை அழைக்கும் வேறு பெயர்களைக் கோவைப்படுத்துவர்.<br>• மரியன்னையின் காட்சிகளை விசுவசிப்பர்.<br>• கிறிஸ்தவ வழிபாடுகளின் போது மரியன்னைக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைப் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.<br>• மரியன்னைக்குரிய மரியாதையைச் செலுத்துவர்.<br>• மரியன்னையைப் போல் பிறருக்காகப் பரிந்து பேசுவர். | 02 |
| | 6.5.5 திருச்சபையின் பொதுச் செபங்களைத் தமது அன்றாட வாழ்வில் செபிப்பர். | **பாடம் 23 : பொதுச் செபங்கள்**<br>• அப்போஸ்தவிக்க விசுவாசப் பிரமாணம் (12 விசுவாச உண்மைகள்)<br>• மூவேளைச் செபம் செபிக்க வேண்டிய வேளைகள். யேசுவின் மனிதாவதாரம்.<br>• பாஸ்கா கால மூவேளைச் செபம். (யேசுவின் உயிர்ப்பிலிருந்து விண்ணேற்பு வரை)<br>• கிறிஸ்துவின் உயிர்ப்பு<br>• திரித்துவ ஆராதனை விளக்கம்.<br>• உத்தம மனஸ்தாபச் செபம். (சொல்லப்படும் சந்தர்ப்பங்கள்)<br>• எல்லா வல்ல இறைவனிடம் (திருப்பலியில் சொல்லப்படும்)<br>• மிக்கேல் அதிதூதரின் செபம்.<br>(மேற்குறிப்பிட்ட செபங்களை மனனம் செய்வர்) | • பொதுச் செபங்கள் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.<br>• பொதுச்செபங்கள் மனனஞ் செய்து வைத்திருப்பது வாழ்க்கைக்கு மிக பயனுள்ளதாய் அமையும் என்பதனை ஏற்றுக் கொள்வர்.<br>• குறிப்பிட்ட ஒரு செபத்தை மனனஞ் செய்து பக்தியோடு செபிப்பர்.<br>• அன்றாட வாழ்வில் செபத்தைத் தொடர்புப் படுத்திக் கொள்வர்.<br>• ஒன்றுகூடி கூட்டமாகச் செபிப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 6.5.6 உள்ளத்தால் எழும் செபங்களை இறைவனுக்கு ஒப்புக் கொடுப்பர். | **பாடம் 24 : செபங்களை உருவாக்குதல்**<br>• யேசு கற்பித்த செபத்தின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்குதல்.<br>• புகழ்ச்சி<br>• நன்றி<br>• மன்னிப்பு<br>• வேண்டுதல்.<br>• செபங்களை மாணவர்கள் உருவாக்க சந்தர்ப்பம் வழங்கல். | • செப உதவி தேவைப்படும் அனைவருக்காகவும் செபித்தல் கிறிஸ்தவ கடமை என்பதை வெளிப்படுத்துவர்.<br>• எப்பொழுதும் இறைப் புகழ்ச்சியில் ஈடுபட வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• செப வகைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கி ஆக்கமொன்றை தயாரிப்பர்.<br>• இதயத்திலிருந்து வரும் செபங்களை அன்றாட வாழ்வில் பயன் படுத்துவர்.<br>• தீமை செய்பவர்களுக்காகச் செபிப்பர். | 02 |
| | 6.5.7 நற்செய்தியை அடிப்படையாகக் கொண்டு தியானம் ஏற்பாடு செய்வர். | **பாடம் 25 : தியானம்**<br>• நற்செய்தியை அடிப்படையாகக் கொண்ட தியானம்.<br>(சுயமாக தியானிக்க பழகிக் கொள்வர்) | • திருவிவிலியத்தை அடிப்படையாக கொண்ட தியான ஒழுங்கினை கூறுவர்.<br>• தியானத்திற்காக மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திருவிவிலியத்தை அடிப்படையாக கொண்டு தியானத்தில் ஈடுபடுவர்.<br>• அன்றாடம் தியானிப்பர். | 01 |

# கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கான வழிகாட்டல்

# பாடம் - 01

# திருவிவிலியம்

**தேர்ச்சி 1.0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 6.1.1** : திருவிவிலியத்தில் உள்ள நூல்களை புரட்டிப் பார்த்து அறிந்து கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- திருவிவிலியத்தின் இரு முக்கிய பிரிவுகளைச் சேர்ந்த நூல்களையும் கோவைப்படுத்துவர்.
- திருவிவிலியத்தை மரியாதையுடன் வீட்டில் அரங்கேற்றி வைக்கக் கூடிய முறை பற்றிய ஆலோசனைகளை முன்வைப்பர்.
- திருவிவிலிய நூல்களை கணப்பொழுதில் பிழையின்றிப் புரட்டுவர்.
- திருவிவிலியத்தை மரியாதையுடன் பயன்படுத்துவர்.
- குழு ஆய்வுக்கான உதவிகளைப் பெற்றுக்கொடுப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 ஐ செயற்படுத்தி கீழ்க் காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - நிறைவேற்றப்பட்ட நிகழ்வினூடாக, திருவிவிலியத்தை மரியாதை செய்ய எடுக்கப்பட்ட செயற்பாடுகள் (வெள்ளைத் துணியின் மீது வைத்தல், இரு பக்கத்திலும் மெழுகு வர்த்தியை ஏற்றுதல், ஆராதனை செய்தல், பூ வைத்தல், முத்தமிடுதல், அரங்கேற்றல், கௌரவமாகப் பயன்படுத்தல்)
    - திருப்பலி வேளையில் திருவிவிலியத்துக்கு(இறைவார்த்தை) மரியாதை செலுத்தும் முகமாக செய்யும் செயல்கள்(தூபம் காட்டுதல், பவனியாகக் கொண்டு செல்லும் முறை, வாசகங்களை வாசிக்க முன் ஆராதனை செய்தல், வாசித்த பின் முத்தமிடுதல்)
    - வேறு நூல்களுக்குக் கொடுக்காத மரியாதையை திருவிவிலியத்துக்குக் கொடுப்பதற்கான காரணம் (அதில் இறைவார்த்தை உள்ளடக்கப்பட்டமை)
    - திரு விவிலியத்தில் இறைவார்த்தை உள்ளடக்கப்பட்டமையால் அதனை பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டியவை;
        - கையில் ஏந்தி வைத்திருக்கும் முறை
        - ஒவ்வொரு இடத்துக்கும் கொண்டு செல்லும் முறை
        - வைக்கக் கூடிய, வைக்கக் கூடாத இடங்கள்
        - மரியாதை செலுத்துவதற்காக செய்யக்கூடியவை
    - ஒவ்வொரு வீட்டிலும் திருவிவிலியம் அரங்கேற்றி வைக்கப்பட்டுள்ள இடத்தை பற்றி விசாரித்தல், அவ்விடங்கள் தகுதியானவையா, தகுதியற்றவையா எனக் கலந்துரையாடல்.
    - மரியாதையாக அரங்கேற்றி வைக்கப்படாத வீடுகளில் அவற்றை எவ்வாறு மரியாதையாக அரங்கேற்றி வைக்கலாம் என்பதற்கான அபிப்பிராயங்களைக் பெற்றுக் கொள்ளல்
    - எல்லா வீடுகளிலும் திருவிவிலியம் வைத்திருப்பதன் முக்கியத்துவமும் பயனுள்ளதுமாகும்.

(20 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் பாடப் புத்தகம், இணைப்பு 1, 4 ஆகியவற்றை பகிர்ந்தளியுங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(30 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் மாணவர்களுக்கு வாய்ப்பினை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
  - திருவிவிலியம் என்பது,
    - பரிசுத்தமான நூலாகும் (இறைவார்த்தை உள்ளடக்கப்பட்டமையால்)
    - இறை வெளிப்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது. (இறைவன் மனிதனுடன் உரையாடல்)
    - திருவிவிலியத்தின் முக்கிய பிரிவுகள் 02
    - பழைய ஏற்பாடு 46 நூல்கள்
    - புதிய ஏற்பாடு 27 நூல்கள்
  - திருவிவிலியத்தின் 73 நூல்கள்
  - ஒவ்வொரு பிரிவுகளிலும் உள்ள நூல்களின் பெயர்கள்

  (கத்தோலிக்க திரு மறைக்காக பாடசாலையில் விசேட வகுப்பொன்று ஒதுக்கப்பட்டிருப்பின் திருவிவிலியத்தை நிரந்தரமாக அங்கே அரங்கேற்றி வையுங்கள்.)

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம்(எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு திருவிவிலியம்)
- வெள்ளைத் துணி, இரண்டு மெழுகுவர்த்திகள், மெழுகுவர்த்திகளை வைக்கும் இரு தாங்கிகள் அல்லது தட்டுகள்
- வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் ஒவ்வொரு பூ
- பிரிஸ்ட்டல் அட்டை, டிமைன் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 1, 2, 3, 4

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடியவகையில் நியதிகளை தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள்.
- உங்கள் ஒவ்வொருவர் கைகளிலும் உள்ள திருவிவிலியத்தின் உள்ளடக்கம் உள்ள பக்கத்தை புரட்டுங்கள்.
- அதிலுள்ள முக்கிய பிரிவுகள் 2 ஐ பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- பழைய ஏற்பாட்டில் உள்ள நூல்களின் தொகையை எண்ணுங்கள்.
- இணைத் திருமுறை நூல்களின் தொகையை எண்ணுங்கள்.
- பழைய ஏற்பாடு, இணைத் திருமுறை ஆகிய இரு பிரிவுகளுக்கும் பொதுவான இரு நூல்களை அறிந்து கொள்ளுங்கள்.
- இவ்விரு பிரிவுகளுக்கும் பொதுவாகவுள்ள இரு நூல்களை ஒரு முறை எழுதி, பழைய ஏற்பாட்டு நூல்களின் பெயர்களை இலக்கமிட்டு வரிசைக்கிரமமாக எழுதுங்கள்.
- புதிய ஏற்பாட்டு நூல்களின் பெயர்களை இலக்கமிட்டு வரிசைக்கிரமமாக எழுதுங்கள்.
- குழுவிலுள்ள ஒருவர் ஒரு நூலின் பெயரை குறிப்பிடும் போது ஏனையோர் அதனைப் புரட்டுங்கள். (பலர் இச்சந்தர்ப்பத்தைப் பெற்று, பல முறை இவ்வாறு செய்யுங்கள்)
- அதன் பின் உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக கொண்டு ‘‘திருவிவிலியம்’’ பற்றிய முன்வைப்பு ஒன்றிற்கு தாயாராகுங்கள். (முன் வைப்பிற்காக, சிந்தனையைக் கிளறும் வகையிலான கலந்துரையாடல், நாடகம், தாளலயப் பாட்டு, சுவரொட்டி ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்.)

## இணைப்பு 2

- மேசையின் மேல் வெள்ளைத் துணியை விரித்து, அதன் மீது எசாயா 55: 10-11 பகுதி புரட்டப்பட்டவாறு திருவிவிலியத்தை அரங்கேற்றி வையுங்கள்.
- திருவிவிலியத்தின் இரு பக்கங்களிலும் இரு மெழுகுவர்த்திகளையும் ஏற்றுங்கள்.
- மாணவர்களை ஒவ்வொரு பூக்களோடு வகுப்பறைக்கு வெளியே வரிசையாக நிற்கச் செய்யுங்கள்.
- இணைப்பு 3 இல் உள்ள கிறிஸ்தவ பாடலோ அல்லது பொருத்தமான வேறு ஒரு பாடலை பாடியவாறு, மரியாதையோடு வரிசையாகச் சென்று, திருவிவிலியத்தை வணங்கி, திருவிவிலியத்திற்கு முன் பூ வைக்குமாறு மாணவரை அறிவுறுத்துங்கள்,

- கிறிஸ்தவ கீதத்தைப் பாடிய பின், ஆசிரியர் எசாயா 55: 10-11 பகுதியை வாசித்து, சிறிது நேரம் மௌனமாக இருந்து, திருவிவிலியத்தை மேலே உயர்த்தி ''இது ஆண்டவரின் அருள் வார்த்தை'' எனக் கூறி, அதனை முத்தமிட்டு, உரிய இடத்தில் அரங்கேற்றுங்கள்.
- ''பிதா, சுதன்….'' என, சிலுவை அடையாளத்தை வரைந்து, செயற்பாட்டினை நிறைவுச் செய்யுங்கள்.

### இணைப்பு 3

### பொருத்தமான பாடல்

### இணைப்பு 4

**திருவிவிலியம்**

திருவிவிலியமானது உலகெங்கும் பரந்து வாழும் கிறிஸ்தவர்களின் என்றென்றும் மரியாதைக்குரிய ஓர் பரிசுத்த நூலாகும். இது கிறிஸ்தவர்களாகிய எம் அனைவருக்கும் உன்னத நூலாகும். எல்லா நூல்களுக்கும் இது ஒரு தாய் நூலாகும். எனவே அதனைத் தவிர கிறிஸ்தவர்களாகிய எமக்கு உன்னத நூல் வேறேதுமில்லை. கிறிஸ்தவர்களாகிய எமது நம்பிக்கை, எதிர் நோக்கு என்பவற்றின் அடிப்படை இதுவாகும். இது 1200 வருட காலமாக, 60 ஆசிரியர்களின் பங்களிப்பில் எழுதப்பட்டதாகும். இதனால் இதன் மதிப்பு ஒரு காலத்துக்கு மட்டும் உரியதானதல்ல. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள செய்தி எக்காலத்துக்கும் பொருந்தக் கூடியதாகும்.

இவ்வுன்னத நூலினை இரு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. பழைய ஏற்பாடு
2. புதிய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டில் கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட காலம் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவையும் தொடக்கத் திருச்சபையையும் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு பிரிவுகளுக்குமிடையே தொடர்பொன்று உண்டு. இறைவன் வரலாற்று நிகழ்வுகள், இறைவாக்கினரின் நூல்கள் உட்பட சிறந்த மனிதர்கள் வழியாக தம்மை வெளிக்காட்டியமை என்பன பழைய ஏற்பாட்டில் உள்ளடக்கப் பட்டுள்ளதுடன், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் வழியாக இறைவன் தம்மை வெளிப்படுத்துவது குறிப்பிடப்பட்டுள்ளது. இது கிறிஸ்துவின் வெளிப்பாட்டின் நிறைவாகும். (எபிரேயர் 1/1-2) கிறிஸ்து மானிடருக்கு மீட்பை பெற்றுக் கொடுத்தார்.

**வீட்டுச் சூழலில் :**

தினமும் வீட்டில் செபிக்கும் போது, திருவிவிலியத்தையும் பயன்படுத்தும் படி செய்யுங்கள்.

## பாடம் - 02

## பஞ்சாகமம்

**தேர்ச்சி 1.0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 6.1.2** : சட்ட நூல்களை ஊக்கத்தோடு பயன்படுத்தவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

**(கீழ் காணும் கற்றல் பேறுகளின் வழியாகத் தயாராகுங்கள்.)**

- சட்ட நூல் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.
- இறையன்புக்குப் பிரதி அன்பு காட்ட வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- சட்ட நூல் பற்றிய சுவரொட்டியொன்றை ஆக்குவர்.
- சட்ட நூலை வாசிக்க விரும்புவர்.
- குழுக்களுக்கிடையே அன்பாகச் செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 ஐ செயற்படுத்தி கீழ்க் காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - திருவிவிலிய நூல்களின் எண்ணிக்கை
  - திருவிவிலியத்தில் உள்ள முதல் 5 நூல்களினது பெயர்
  - அவற்றின் பொதுப் பெயர்

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 3 ஆகியவற்றை பகிர்ந்தளியுங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- பூ வரையப்பட்ட பிரிஸ்ட்டல் அட்டையில் மாணவர்களின் ஆக்கங்களை ஒழுங்காக மாணவர்களே ஒட்டும் படி செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
  - சட்ட நூலின் வேறு பெயர்கள்
    - சட்ட நூல்
    - ஐந்நூல்
    - மோசேயின் சட்டங்கள்
    - பஞ்சாகமம்
    - எபிரேயர் மொழியில் ‘‘தோரா’’

- தொடக்க நூலின் உள்ளடக்கம் (சுருக்கமாக)
    - இறைவன் உலகத்தை படைத்தல்
    - ஆதாமும், ஏவாளும் பாவத்தில் வீழ்தல் (மனிதனின் வீழ்ச்சி)
    - காயினும் ஆபேலும்
    - நோவா
    - ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, யோசேப்பு
- விடுதலைப்பயண நூலின் உள்ளடக்கம் (சுருக்கமாக)
    - பார்வோன் மன்னன் இஸ்ரயேலரைத் துன்புறுத்தல்
    - இறைவன் பார்வோனிடமிருந்து, அவர்களை மீட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு அழைத்துச் சென்றார்.
    - அப் பயணத்தின் போது சீனாய் மலையில் 10 கட்டளைகளைக் கொடுத்தார்.
    - இறைவன் மனிதனின் மேல் செலுத்திய அன்பு, இக் கதைகள் வழியாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன.
    - அதே போன்று இறைவன் நம்மீதும் அன்பு செலுத்துகிறார்.
    - நாமும் அவ்வாறே இறைவனுக்கு அன்பு செலுத்த வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம்(எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு திருவிவிலியம்)
- வெள்ளைத் துணி, இரண்டு மெழுகுவர்த்திகள், மெழுகுவர்த்திகளை வைக்கும் இரு தாங்கிகள் அல்வது தட்டுகள்
- வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் ஒவ்வொரு பூ
- பிரிஸ்ட்டல் அட்டை, பசை
- ஒரு குழுவிற்கு ஒன்று வீதம் எழுதும் கடதாசி (A4), பிளாற்றினம் பேனா
- இணைப்பு 2 இல் குறிப்பிடப்பட்ட பூவிதழ், வட்டங்கள்
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடியவகையில் நியதிகளை தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

### இணைப்பு 1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக கொண்டு நீங்கள் பெற்ற $A_4$ தாளில் ஒரு பக்கத்தை பயன்படுத்தி தெளிவான அழகான கையெழுத்தில் கட்டுரை, கவிதை, தாளலயப் பாட்டு போன்ற ஆக்கமொன்றைத் தயாரியுங்கள்.
- உங்கள் ஆக்கத்தினை குழுவாக முன்வைக்க தயாராகுங்கள்.

## இணைப்பு 2

- ஐந்து நிறங்களைக் கொண்ட 5 பெரிய பூவிதழ்களை வெட்டிக் கொள்ளுங்கள்.
- இந்த ஒவ்வொரு பூவிதழிலும் சட்ட நூல்களின் 5 பெயர்களையும் (வரிசைக் கிரமமாக இலக்கமிட்டு) எழுதுங்கள்.
- வெள்ளை நிற வட்டமொன்றை வெட்டி அதன் மீது "ஐந்நூல்" என எழுதுங்கள்.
- பிரிஸ்டல் போட் ஒன்றையும் வகுப்பிற்கு கொண்டு செல்லுங்கள்.
- பிரிஸ்டல் போட்டை வகுப்பில் அனைவருக்கும் தெரியக்கூடிய இடத்தில் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் சிலரை அழைத்து 'வட்டம்' ஒன்றையும் 'பூவிதழ்கள் 5' யும் பயன்படுத்தி பிரிஸ்டல் போட்டின் நடுவில் ஒரு மலர் உருவாகக் கூடியதாக (பூவிதழ்களிலுள்ள இலக்கங்களை கவனத்தில் கொண்டு) ஒட்டும்படி அறிவுறுத்துங்கள்.
- இம் மாணவர்கள் பூவை ஒட்டுகையில் ஏனைய மாணவர்களுக்கு ஐந்நூல் பெயர்கள் எழுதப்பட்ட தாளை ஒவ்வொன்றாகக் கொடுத்து தமக்குக் கிடைத்துள்ள நூலை திரு விவிலியத்தில் புரட்டும் படி அறிவுறுத்துங்கள்.

## இணைப்பு 3
## ஆய்வுக்கான அறிவுரை

### சட்ட நூல்கள்

திருவிவிலியத்தில் தொடக்க நூல், விடுதலைப்பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச் சட்டம் என்பன முதல் ஐந்து நூல்களாகும். இவை சட்ட நூல்கள் எனப்படும். சட்ட நூல்கள் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.

1 சட்ட நூல்
2. ஐந்நூல்
3. மோசேயின் சட்டங்கள்
4. பஞ்சாகமம்
5. தோரா

தொடக்கநூலில் கீழ்க் காணும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- இறைவன் பிரபஞ்சத்தையும் மனிதனையும் படைத்தார்.
- ஆதாம், ஏவாள் பாவத்தில் வீழ்தல்
- காயின், ஆபேல் கதை
- நோவாவும் வெள்ளப் பெருக்கும்
- பாபேல் கோபுரம்
- குலமுதுவர் ஆபிரகாம்
- குலமுதுவர் ஈசாக்கு
- குலமுதுவர் யாக்கோபு
- யோசேப்பு

விடுதலை பயண நூலில் கீழ்க் காணும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- பார்வோன் மன்னன் இஸ்ரயேலரை துன்புறுத்தல்
- மோசே
- இறைவன் இஸ்ரயேலரை பார்வோன் மன்னனிடமிருந்து விடுவித்து வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு கொண்டு செல்லல்.
- அப்பயணத்தின் போது சீனாய் மலை மீது 10 கட்டளைகளைக் கொடுத்தல்

**வீட்டுச் சூழலில் :**

பிறரை அன்பு செய்யத் தூண்டுங்கள்.

## பாடம் - 03

## நற்செய்தி

**தேர்ச்சி 1.0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 6.1.3 :** நற்செய்தி நூல்களைக் கற்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

**(கீழ் காணும் கற்றல் பேறுகளின் வழியாகத் தயாராகுங்கள்.)**

- நற்செய்தி நூல்கள் நான்கினையும் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.
- நாம் ஒவ்வொருவரும் பிறருக்கு ஓர் நற்செய்தியாக வேண்டு மென்பதை ஏற்றுக் கொள்வர்.
- நற்செய்தி பற்றிய ஆக்கமொன்றை முன்வைக்க முயல்வர்.
- நற்செய்தியை அன்றாட வாழ்வில் பயன்படுத்துவர்.
- குழுவினரின் பங்களிப்போடு செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 ஐ செயற்படுத்தி கீழ்க் காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - நற்செய்தி நூல்கள் நான்கினதும் பெயர்கள்
    - நற்செய்தி நூல்கள் புதிய ஏற்பாட்டில் நிறுவப்பட்டுள்ள விதம்
    - நற்செய்தியின் வரிசைக்கிரமம்

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 3 ஆகியவற்றை பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
    - நற்செய்தி நூல்கள் நான்கினது பெயர்கள்
    - ஒவ்வொரு நற்செய்தி நூலின் ஆசிரியர் பற்றிய அறிமுகம்.
    - நான்கு நற்செய்தியினதும் அடையாளம்.
    - நாம் ஒவ்வொருவரும் பிறருக்கு ஒரு நற்செய்தியாவதன் முக்கியத்துவம்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம்
- பிரிஸ்ட்டல் அட்டை, டிமைன் தாள், மாக்கர் பேனா
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடியவகையில் நியதிகளை தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக கொண்டு ‘‘நான்கு நற்செய்தி ’’ பற்றிய முன்வைப்பு ஒன்றிற்கு தாயாராகுங்கள். (முன் வைப்பிற்காக, குழு கலந்துரையாடல், நாடகம், தாளலயப் பாட்டு, சுவரொட்டி ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்)

**இணைப்பு 2**

**திருவிவிலியத்தில் நற்செய்தி நூல்களை விரைவாகப் புரட்டும் போட்டி**

(மாணவர்கள் அனைவரும் ஒரு திருவிவிலியத்தை கொண்டு வருமாறு, முன்னர் செய்யப்பட்ட செயற்பாட்டின் இறுதி நாளில் அறிவுறுத்துங்கள்.)

- போட்டி நிபந்தனைகள்
    - ஆசிரியர் கூறும் நற்செய்தியினைப் புரட்டியதும் கையை உயர்த்த வேண்டும்.
    - குறிக்கப்பட்ட நற்செய்தியின் தொடக்கத்தையே புரட்ட வேண்டும்.
    - கையை உயர்த்திய பின்னர் எந்தப் பக்கத்தையும் புரட்ட முடியாது.
    - கையை உயர்த்திய பின்னர் பக்கங்களை புரட்டுவோருக்கு புள்ளி வழங்கப்பட மாட்டாது.
    - முதலில் புரட்டும் மாணவருக்கு 10 புள்ளியும், இரண்டாவதாக புரட்டும் மாணவருக்கு 05 புள்ளியும், மூன்றாவதாக புரட்டும் மாணவருக்கு 03 புள்ளியும், இரண்டு நிமிடங்களுக்குக் குறைந்த காலத்துக்குள் புரட்டும் மாணவருக்கும் புள்ளி வழங்குங்கள். (ஒவ்வொரு மாணவருக்கும் உரிய புள்ளி, குறிக்கப்பட்ட மாணவனும் அயலில் உள்ள மாணவனும் ஞாபகத்தில் வைத்திருத்தல் போதுமானது.)
    - எல்லா புள்ளிகளையும் வழங்கிய பின் திருவிவிலியத்தை மூட வேண்டும்.
    - ஆசிரியர் நற்செய்தி நூலின் பெயரைக் கூறும் வரிசைக்கிரமம்.
        - புனித லூக்கா நற்செய்தி
        - புனித மத்தேயு நற்செய்தி
        - புனித யோவான் நற்செய்தி
        - புனித மாற்கு நற்செய்தி
    - போட்டியின் முடிவில் புள்ளிகளுக்கேற்ப 1, 2, 3 ம் இடங்களை இனங்கண்டு பரிசளியுங்கள்.

## இணைப்பு 3

### குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்

புதிய எற்பாட்டில் 27 நூல்கள் உள்ளன. அவற்றில் முதல் நான்கு நூல்களாவன;

1. மத்தேயு நற்செய்தி
2. மாற்கு நற்செய்தி
3. லூாக்கா நற்செய்தி
4. யோவான் நற்செய்தி

இவை நற்செய்திகள் எனப்படும். இவை எழுதிய நூலாசியர்களின் பெயரிலேயே அழைக்கப்படுகின்றன. அந் நான்கு ஆசிரியர்களது பெயர்களாவன

1. புனித மத்தேயு
2. புனித மாற்கு
3. புனித லூாக்கா
4. புனித யோவான் என்பவராவர்.

புனித மத்தேயு இயேசுவின் 12 திருதூாதர்களுள் ஒருவராவார். இயேசு கிறிஸ்து புனித மத்தேயுவை அழைக்க முன் அவர் வரிதண்டுபவராக இருந்தார். அவரது தந்தையின் பெயர் அல்பேயு. அவருடைய நற்செய்தியின் அடையாளம் ‘மனித முகம்’ ஆகும்.

புனித மாற்கு இயேசு கிறிஸ்துவின் திருதூாதர் அல்ல. இவரை யோவான் மாற்கு எனவும் அழைப்பார். இவர் புனித பேதுருவின் சீடராவார். புனித பேதுருவின் மொழிபெயர்ப்பளராக பணியாற்றியுள்ளார். எனவே இயேசு கிறிஸ்துவைப் பற்றி அனேக விடயங்களை புனித பேதுருவிடமிருந்து அறிந்திருப்பார். இவரின் நற்செய்தியின் அடையாளம் “சிங்க முகம் ஆகும்”.

புனித லூாக்கா இயேசுக் கிறிஸ்துவின் திருதூாதர் அல்ல. இவர் ஒரு வரலாற்று வல்லுனரும், ஓவியரும், வைத்தியரும் ஆவார். நற்செய்தியை எழுதிய ஓரே ஒரு புற இனத்தார் இவராவார். புனித பவுலோடு மறைதூதுப் பணியில் ஈடுபட்டிருந்தார். பல்வேறு மூலகங்களிலிருந்து தகவல்களை திரட்டி இந்நற்செய்தியினை தாயாரித்துள்ளார். “எருதின் முகம்” இவரது நற்செய்தியின் அடையாளமாகும்.

புனித யோவான் இயேசு கிறிஸ்துவின் திருதூாதராவார். பெரிய யாக்கோபு இவருடைய சகோதரன் ஆவார். இவர் இயேசுக் கிறிஸ்துவின் ஒரு திருத்தூாதர். இவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் திருதூாதர்கள் ஆவதற்கு முன்பு மீனவர்களாக இருந்தனர்’ செபதேயு, சலோமே இவர்களது பெற்றோராவர். இயேசுவின் அன்னை மரியாள் இவர்களுடைய உறவினராவார். எனவே இவர்கள் இருவரும் இயேசு கிறிஸ்துவின் உறவு முறையில் சகோதரர்களாக இருந்தனர். “கழுகின் முகம்” இவருடைய நற்செய்தியின் அடையாளமாகும்.

**வீட்டுச் சூழலில் :**

பிறருக்கு உதவி செய்யும் வண்ணம் செயற்பட ஊக்கப்படுத்துங்கள்.

## பாடம் - 04

## உலகப் படைப்பின் செய்தி

**தேர்ச்சி 2.0** : இறைவெளிப்பாட்டுக்கு பதிலளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.2.1** : இறைவனின் படைப்பை மதிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- ஒவ்வொரு நாள் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.
- இறைவன் உலகத்தை படைத்தார் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- இறைவனின் ஒவ்வொரு நாள் படைப்பையும் ஆக்க பூர்வமாக முன்வைப்பர்.
- இறைவனின் படைப்பை மதிப்பர்.
- குழுச் செயற்பாடுகளின் போது ஒத்துழைப்பு நல்குவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 ஐ செயற்படுத்தி கீழ்க் காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - படைப்புகள் அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவை
    - இறைவனே இவ்வுலகத்தை படைத்தவராவர்.
    - இறைவனின் படைப்பை எம்மீது கொண்ட அன்பினால் எமக்கு அளித்துள்ளார்.
    - எனவே இறை படைப்பினை நாம் அன்பு செய்ய வேண்டும்.

(20 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 2 ஆகியவற்றை பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(30 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
    - இறைவன் ஆறு நாட்களில் உலகைப் படைத்தார்.(தொடக்க நூல் 1:1, 2:4அ, திருப்பாடல் 104)

| நாள் | படைப்பு |
|---|---|
| முதலாம் நாள் | ஒளி |
| இரண்டாம் நாள் | வானமும், பூமியும் |
| மூன்றாம் நாள் | நிலம், மரஞ் செடி, கொடி |
| நான்காம் நாள் | சூரியன் சந்திரன் விண்மீன் |
| ஐந்தாம் நாள் | பறவைகள், மீனினங்கள் |
| ஆறாம் நாள் | மிருகங்கள், மனிதன் |

- இவை அனைத்தும் இறைவனின் படைப்பாகும் (திருப்பாடல் 104)
- இறைவன் மனிதனுக்கு தேவையான சூழலைப் படைத்துள்ளார்.
- மனிதனின் நன்மையைக் கருதி அனைத்தையும் படைத்துள்ளார்.
- இறைவனின் படைப்பை மதிக்க வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் (தொடக்க நூல் 1: 1, 2:4அ, திருப்பாடல் 104)
- பிரிஸ்ட்டல் அட்டை, டிமைன் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளை தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப்படுத்திய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இறைவனின் ஒவ்வொரு நாள் படைப்பையும் ஆக்கப்பூர்வமாக முன்வைக்க தாயாராகுங்கள். (முன் வைப்பிற்காக உரையாடல், நாடகம், தாளலயப் பாட்டு, சுவரொட்டி ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்)

**இணைப்பு 2**

- மாணவர்களை கவர்ச்சியான ஒரு சூழலுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- அச்சூழலை நன்றாக ஆராயும் படி மாணவர்களை அறிவுறுத்துங்கள்.
- அவர்கள் அச்சூழலில் பெற்ற அனுபவங்களைக் கேட்டறிந்து கரும்பலகையில் குறித்துக்கொள்ளுங்கள்.
- இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

சூழலை அன்பு செய்ய பிள்ளைகளை ஊக்குவிக்கவும்.

## பாடம் - 05

## பல்வகைப் படைப்புக்கள்

**தேர்ச்சி 2.0** : இறைவெளிப்பாட்டுக்கு பதிலளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.2.2** : இறைவனின் படைப்பைப் பாதுகாப்பதோடு இறைவனுக்கு நன்றி கூறுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள் :**

- படைப்பைப் பாதுகாக்க கூடிய செயற்பாடுகளைக் கோவைப் படுத்துவர்.
- இறைவனின் படைப்பைப் பாதுகாக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- இறைவனின் படைப்பைப் பாதுகாப்பதில் மனிதனின் இயலாமையை ஆக்க பூர்வமாக முன்வைப்பர்.
- படைப்பைப் பாதுகாக்க முன்வருவர்.
- பாடசாலை சூழலை அழகாக அமைப்பதற்கு ஒற்றுமையாகச் செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- பாடல் எழுதிய தாள்களை மாணவர்களிடையே பகிர்ந்து, அவர்களுடன் இணைந்து தாளத்துடன் பாடுங்கள்.
- கீழ்க் காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - தாய் பறவை சிறுவர்களாகிய எம்மிடம் வேண்டும் வேண்டுகோள்
        - எமது கூட்டினை உடைக்காதீர்
        - எமது உயிரை பாதுகாக்க உதவுங்கள்
        - எமது கூட்டில் வாழ எமக்கு இடமளியுங்கள்
    - இறைவனின் படைப்பில் அடங்குபவை – வானம், பூமி, சூரியன், சந்திரன், விண்மீன், மரஞ் செடி கொடி, பறவைகள், மீன்கள், மிருகங்கள், மனிதன் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டும்.
    - இறை படைப்பை பாதுகாத்தல் எமது கடமையாகும்.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(30 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
    - படைப்பை விருத்திச் செய்து பாதுகாக்கும் பொறுப்பு மனிதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(தொடக்க நூல் 1: 28-29, 2/15)
    - இறைப்படைப்பை விருத்திச் செய்ய நாம் பாடுபட வேண்டும்.
    - சூழலை அழகாக பாதுகாக்க நாம் பங்களிப்புச் செய்ய வேண்டும்.
    - எமது சுற்றாடலை(வீடு, பாடசாலை, சூழல்) நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
    - மனிதனின் தேவைகளுக்காகவே தானியங்களும், செடிகளும் தரப்பட்டுள்ளன.
    - மனிதன் வாழ்வதற்காக மரஞ்செடி கொடிகள் கொடுக்கப்பட்டுள்ளன.
    - எனவே நாம் இறைவனுக்கு நன்றி கூற வேண்டும்.
    - இறைவன் படைத்த இவ்வுலகை இன்று பாதுகாப்பதற்கு மனிதன் இயலாதிருக்கின்றான்.
    - இறைவனின் படைப்பைப் பாதுகாப்பது எமக்குரிய கடமையாகும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் (தொடக்க நூல் 1/28, 2/15)
- பாடல் எழுதப்பட்ட தாள்
- பிரிஸ்ட்டல் அட்டை, டிமைன் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப்படுத்திய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இறைவனின் ஒவ்வொரு நாள் படைப்பையும் ஆக்கப்பூர்வமாக முன்வைக்க தாயாராகுங்கள். (முன் வைப்பிற்காக உரையாடல், நாடகம், தாளலயப் பாட்டு, சுவரொட்டி ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்)

    - குழு 01 -
        - தொடக்க நூல் 1/28-29, 2/15 ஆகிய பகுதிகளை வாசியுங்கள்.

- இறைவனின் படைப்பை விருத்திச் செய்வதற்கு நீங்கள் மேற்கொள்ளக் சுடிய செயற்பாடுகளை சுவரொட்டியின் வழியாகக் காட்டுங்கள்.

○ குழு 02 -

- தொடக்க நூல் 1/28-29 ஐ வாசியுங்கள்.
- இறைவனின் படைப்பினால் மனிதன் அடையும் பயன்களை உரையாடல் வழியாக முன் வையுங்கள்.

○ குழு 03 -

- இறைவனின் படைப்பை பாதுகாப்பதற்கு இன்று மனிதன் இயலாதவனாக இருக்கின்றான் என்பதை சித்திரமாக வரையுங்கள்.

○ குழு 04 -

- உங்கள் வீடு, பாடசாலை ஆகியவற்றைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கக் கூடிய விதத்தினை தனித்தனியாக 10 வசனங்களில் எழுதுங்கள்.

| வீட்டைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கும் விதங்கள் 10 | பாடசாலையைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கும் விதங்கள் 10 |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

**இணைப்பு 2**

**பாட்டு**

சின்னஞ் சிறார்களே கேட்டிடுவீர்!
சிறு பிராணிகள் எங்களை காத்திடுவீர்

காடு மேடு எங்கும் பறந்து சென்று – நாம்
சிறு சுள்ளிகள் ஒவ்வொன்றாய் கொண்டு வந்து
அலகினால் அடுக்கி அமைத்து வைத்த – எங்கள்
அற்புத கூட்டினைக் காத்திடுவீர்!

முட்டை இட்டு அடை காத்திடவும் - நாம்
குஞ்சுகளைப் பேணி வளர்த்திடவும்
எந்தை சிறகுகள் கொண்டமைத்த – எங்கள்
பஞ்சு மெத்தையைப் பிய்த்து விடாதிருப்பீர்

**வீட்டுச் சூழலில் :**

பயனுள்ள செடிகளை உங்கள் வீட்டுத் தோட்டத்தில் நடுவதற்குப் பிள்ளைகளை ஊக்குவியுங்கள்.

## பாடம் - 06

## உன்னத படைப்பு

**தேர்ச்சி 2.0** : இறைவெளிப்பாட்டுக்கு பதிலளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.2.3** : ஒருவருக்கொருவர் மதிப்பளித்து அமைதியுடனும் ஒத்துழைப்புடனும் வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- மனித மாண்பை எடுத்துக் காட்டும் கருத்துக்களைக் கோவைப் படுத்துவர்.
- தனியாள் வேறுபாட்டை மதிக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- மனித மாண்பை காட்டும் ஆக்கங்களை முன் வைப்பர்.
- ஒருவருக்கொருவர் மதிப்பளித்து ஒத்துழைப்புடனும் அமைதியுடனும் வாழ்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வர்.
- பிறர் கருத்துக்களுக்குச் செவிமடுப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 ஐ செயற்படுத்தி கீழ்க்காணும் கருத்துக்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - மனிதன் உயிருள்ள ஒருவனாவான்.
  - இறைவன் மனிதனுக்கு உயிரைக் கொடுத்துள்ளார்.
  - மனிதன் செயற்திறன் மிக்கவனாக செயலாற்ற கூடியவன்.
  - மனிதன் ஞானமும் அறிவும் உடையவன்.
  - மனிதனுக்கு இறை பண்புகள் உள்ளன.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
  - இறைவனின் உன்னத படைப்பு மனிதன்
  - மனிதன் ஏனைய படைப்புகளையும் விட மேலானவன் என்பதற்கான காரணங்கள்
  - இறைவனின் சாயலிலும் உருவிலும் உண்டாக்கியமை (தொடக்க நூல் 1:26 -28)
  - மனிதனின் நாசியில் உயிர் முச்சு ஊதப்பட்டமை (தொடக்க நூல் 2:7)
  - மிகவும் நன்றாய் இருந்ததை வெளிப்படுத்தியமை (தொடக்க நூல் 1:31)
  - மனிதன் விலங்குகள், பறவைகளுக்குப் பெயரிட்டமை(தொடக்க நூல் 2: 20)
  - தனியாள் வேறுபாட்டிலும் ஒருவருக்கொருவர் மதிப்பளித்து அமைதியுடனும் ஒத்துழைப்புடனும் வாழ்தல்.(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் (தொடக்க நூல் 1: 27-28, 2: 7, 1: 31, 2: 20, 2: 21-23)
- றோபோ இயந்திரமொன்றின் படம், மனிதர்கள் வேலை செய்கின்ற படம்
- பிரிஸ்ட்டல் அட்டை, டிமைன் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள திருவிவிலியப் பகுதியை நன்றாக வாசியுங்கள். (தொடக்க நூல் 1: 27-28, 2: 7, 1: 31, 2: 20, 2: 21-23)
- அதனை குழு அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- உங்கள் குழு வாசித்து கோவைப்படுத்திய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மனிதனின் உன்னத தன்மையை வெளிக்காட்டக் கூடிய ஆக்கமொன்றை முன்வைப்பதற்குத் தயாராகுங்கள். (தாளலயப் பாட்டு, கவிதை, நாடகம், உரையாடல், கடிதம், கதை,சொற்பொழிவு, சுவரொட்டி)

**இணைப்பு 2**

- ஆசிரியர் றோபோ இயந்திரத்தின் படம் ஒன்றையும், செயற்படும் ஒரு மனிதனின் படத்தையும் வகுப்புக்குக் கொண்டு வர வேண்டும்.

| மனிதன் | றோபோ இயந்திரம் |
|---|---|
| இறைவனின் படைப்பு | மனிதனின் படைப்பு |
| மனிதனுக்கு அறிவுண்டு | அறிவில்லை |
| மனிதனுக்கு இதயமுண்டு | இதயமில்லை |
| மனிதனுக்கு உணர்ச்சியுண்டு | உணர்ச்சி இல்லை |
| மனிதனுக்கு சுதந்திரமுண்டு | றோபோ இயந்திரம் இயக்கப்பட வேண்டும் |
| மனிதனுக்கு அழியாத ஆன்மா உண்டு | றோபோ அழிந்து போகும். |

- றோபோ இயந்திரத்தின் படத்துக்கும், செயற்படும் மனிதனின் படத்துக்கும் உள்ள வேறுபாட்டை மாணவரிடம் கேட்டறிந்து கரும்பலகையில் எழுத வேண்டும்.
- இக் கருத்துக்ளை அடிப்படையாகக் கொண்டு, பொது கலந்துரையாடலில் ஈடுபட்டு, மனிதனின் உன்னதத் தன்மையை மாணவர்களுக்கு விளக்க வேண்டும்.

**வீட்டுச் சூழலில் :**

ஒருவரையொருவர் மதித்து அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழும்படி வழிநடத்துங்கள்.

## பாடம் - 07

## இயேசுவின் பிறப்பு

**தேர்ச்சி 2.0** : இறைவெளிப்பாட்டுக்கு பதிலளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.2.4** : அன்றாட வாழ்வின் மூலம் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் முதல் 40 நாட்களைப் பற்றி விளக்குவர்.
- எவ்வேளையிலும் இறைவனை புகழ வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- இயேசு கிறிஸ்துவின் பிறப்புப் பற்றிய தகவல்களை ஆக்கப்பூர்வமாக முன்வைப்பர்.
- இறை விருப்பத்திற்கேற்ப செயற்பட பழகுவர்.
- குழுவினரின் ஒத்துழைப்புடன் செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் காட்டும் படத்தை மாணவர்களுக்கு காட்சிப் படுத்தி, ''தூய நகராம் பெத்லகெமில்'' பாடலை மாணவர்களுடன் இணைந்து உரிய இராகத்துடன் பாடுங்கள்.
- இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் படம், பாடல் ஆகியவற்றினால் வெளிப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கீழ்க் காணப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - இயேசு கிறிஸ்து பெத்லேகேம் ஊரில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார்.
    - யோசேப்பும், மரியாவும் இறைவனின் விருப்பத்துக்குக் கீழ்ப்படிந்தனர்.
    - இயேசு கிறிஸ்துவை முதன் முதலில் தரிசித்தவர்கள் இடையர்களாவர்.
    - ஞானிகள் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து இயேசுவை வணங்கினார்கள்.
    - மனித சமூகத்தை பாவத்தில் இருந்து மீட்பதற்காக இயேசு கிறிஸ்து இவ்வுலகுக்கு வந்தார்.
    - பல வருடங்களுக்கு முன் இறைவாக்கினர்கள் கூறியவை நிறைவேறியது.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.

- பூ வரையப்பட்ட பிரிஸ்ட்டல் அட்டையில் மாணவர்களின் ஆக்கங்களை ஒழுங்காக மாணவர்களே ஒட்டும் படி செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
    - மக்கள் தொகை கணக்கெடுப்புக்காக மரியாளும் யோசேப்பும் நாசரேத்திலிருந்து பெத்லகெமுக்குச் சென்றனர். (லூாக்கா 2: 1-7)
    - யோசேப்பு தாவீதின் குடும்பத்தின் வழிமரபினர்
    - வானதூாதர்கள் இடையர்களுக்குத் தோன்றி இயேசு கிறிஸ்துவின் பிறப்பை அறிவித்தனர். (லூாக்கா 2: 8-20)
    - வானதூாதர்கள் புகழ்ச்சிப் பாடலைப் பாடினர்.
    - இடையர்கள் இயேசு கிறிஸ்துவைத் தரிசிக்க சென்றனர். (மத்தேயு 2: 1-12)
    - ஞானிகள் இயேசு கிறிஸ்துவைக் தரிசிப்பதற்காக வருகை தந்து காணிக்கைக் கொடுத்து வணங்கினர். (மத்தேயு 2: 1-12)
    - யூத மரபிற்கேற்ப எட்டாம் நாளில் இயேசு கிறிஸ்துவுக்கு விருத்தச்சேதனம் செய்யப்பட்டது. (லூாக்கா 2: 21)
    - மோசேயின் சட்டத்திற்கேற்ப இயேசுவை ஆலயத்தில் அர்ப்பணித்தனர். (லூாக்கா 2: 22-24)
    - தேசிய சமய மரபுகளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்.
    - மரியாளும் யோசேப்பும் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றினர்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் (தொடக்க நூல் 2: 1-7, 2: 8-20, 2: 21, 2: 21-24, மத்தேயு 2: 1-12)
- கிறிஸ்தவ பாடல் புத்தகம், ''தூய நகராம் பெத்லகெமில்'' பாடல் எழுதப்பட்ட பிரதிகள், கிறிஸ்துவின் பிறப்பைக் காட்டும் படம், நத்தார் வாழ்த்து மடல் தயாரிக்கக் கூடிய பொருட்கள்
- டிமைன் தாள்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.

- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கீழ் காணப்படும் முன்வைப்புக்குத் தயாராகுங்கள்.
    - குழு 01 -
        - லூக்கா 2:1-7 பகுதிகயை நன்றாக வாசித்து குறிக்கப்பட்ட நிகழ்வை நடித்துக் காட்டுங்கள்.
    - குழு 02 -
        - மத்தேயு 2:1-12 பகுதியை நன்றாக வாசித்து நத்தார் வாழ்த்து மடலொன்றை ஆக்குங்கள்.
    - குழு 03 -
        - மத்தேயு 2: 8-20 பகுதியை நன்றாக வாசித்து பாலன் குடிலொன்றை ஆக்குங்கள்.
    - குழு 04 -
        - மத்தேயு 2: 1-12 பகுதியை நன்றாக வாசித்து, அதன் வழியாக தேசிய, சமய சித்திரங்களுக்கு நீங்கள் மதிப்பளிக்கும் முறைகள் 10 ஐ எழுதுங்கள்.

**இணைப்பு 2**

**தூய நகராம் பெத்லேகேமில்**

தூய நகராம் பெத்லேகேமில் தேவ பாலகனும்
நேயமுடனே அவதரித்தார் நெஞ்சம் மகிழ்ந்திடவே

மாமலையோரம் மாடடைக்குடிலில்
மாதவன் மனுவானார்
மாமரி மடியில் மன்னர் மன்னன்
மாண்புடன் கண்ணயர்ந்தார்
மார்கழி மாதம் மயக்கும் குளிரில்
மரியின் மனம் நெகிழ
பார் புகழ் வேந்தன் பனியில் நடுங்கி
பாசத்தில் தேங்கி நின்றார்.

தேனினுமினிய தித்திக்கும் மொழியில்
தேவனின் தூதர்களும்
தேடியே வந்து வானகம் மகிழ
பாலனைப் புகழ்தனரே
பூமியில் நல் மனம் உள்ளவர் யாவரும்
சாந்தியுடன் வாழ
ஏவையின் பாவம் நீக்கிட வந்தார்
என்றே பாடி நின்றார்

**வீட்டுச் சூழலில் :**

நத்தாருக்கு ஆக்கப் பூர்வமான ஒரு பாலன் குடிலை அமைக்கும் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.

## பாடம் - 08

## இயேசுவின் பிள்ளைப்பருவம்

**தேர்ச்சி 2.0** : இறைவெளிப்பாட்டுக்கு பதிலளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.2.5** : ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதனுக்கும் உகந்தவராய் வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள் :**

- இயேசு கிறிஸ்துவின் பிள்ளைப்பருவத்தைப் பற்றிய தகவல்களை கோவைப்படுத்துவர்.
- இயேசு கிறிஸ்து அனைவராலும் விரும்பதக்கவராக வாழ்ந்தார் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- இயேசு கிறிஸ்து கோவிலில் காணாமற் போன நிகழ்வை நடித்துக் காட்டுவர்.
- இயேசு கிறிஸ்துவின் பிள்ளைப்பருவ வாழ்வை முன் மாதிரியாகக் கொண்டு வாழ்வர்.
- தனது குடும்பத்தில் உள்ளவர்களுடன் ஒத்துழைப்புடன் வாழ்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 1 ஐ செயற்படுத்தி கீழ்க்காணும் கருத்துக்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - மனிதன் உடலாலும், உள்ளத்தாலும், சமுக ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் விருத்தியடைய வேண்டும்.
    - இதற்கு எமக்கு ஏனையோரின் உதவி தேவைப்படுகிறது.
    - இயேசு கிறிஸ்துவும் உடல், உள, ஆன்மீக, சமூக ரீதியாக விருத்தியடைந்துள்ளார்.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப்(சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
  - இயேசு கிறிஸ்துவுக்கு பன்னிரெண்டு வயதான போது காணாமல் போன சம்பவம் (லூக்கா 2: 41-52)
  - பிள்ளை பருவத்திலேயே இயேசு கிறிஸ்து மீட்பு பணியில் பங்குபற்றினார்.
  - இயேசு கிறிஸ்து ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்தார்.
  - இயேசுவைப் போல் நாமும் ஆளுமையில் வளர வேண்டும்.
  - இயேசுவின் பிள்ளை பருவத்தில் நாம் பெறக் கூடிய முன்மாதிரிகைகள்

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் (லுக்கா 2: 41-52)
- மனிதனின் விரித்தியைக் காட்டும் படம்
- பிரிஸ்ட்டல் அட்டை, டிமைன் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.


**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்தை, உங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் கேட்கக் கூடிய வகையில், ஒருவர் உரத்து வாசியுங்கள்.
- அதிலுள்ள திருவிவிலியப் பகுதியை நன்றாக வாசியுங்கள். (லுக்கா 2: 41-52)
- அதனை குழு அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்
- உங்கள் குழு வாசித்து கோவைப்படுத்திய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு குழு ஆக்கமொன்றை முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.
  - குழு 01 -
    - லூக்கா 2: 41-52 பகுதியை நன்றாக வாசியுங்கள்.
    - இயேசுவின் பிள்ளைப் பருவ வாழ்க்கையில் நாம் எடுக்கக் கூடிய படிப்பினைகள் ஐந்தினை எழுதுக.
  - குழு 02 -
    - லூாக்கா 2: 41-50 பகுதியை நன்றாக வாசியுங்கள்.
    - இயேசு கோவிலில் காணாமற் போன சம்பவத்தை நாடகமாக நடியுங்கள்.
  - குழு 03 -
    - லுக்கா 2: 41-52 பகுதியை நன்றாக வாசியுங்கள்.
    - இயேசு ஆளுமையில் வளர்ந்த விதத்தினை சுவரொட்டியாகத் தயாரியுங்கள்.

## இணைப்பு 2

- ஆசிரியர் சுவரொட்டியைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வரவும்.
- பிரிஸ்ட்டல் அட்டையை நான்கு பிரிவுகளாக பிரிக்கவும்.




- எழுமாற்றாகத் தெரிவு செய்த மாணவர்கள் சிலரை அழைத்து உடல், உள்ளம், சமூகம், ஆன்மீகம் தொடர்பான வளர்ச்சியினைக்காட்டும் படங்களை உரிய இடங்களில் ஒட்டும்படி அறிவுறுத்துங்கள்.
- மேலேயுள்ள சுவரொட்டியின் வழியாக எழும் கருத்துக்களை கலந்துரையாடுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

இயேசுவின் பிள்ளைப் பருவத்தைப் பற்றிய நூல்களை வாசிக்க பிள்ளைகளைத் தூண்டுங்கள்.

## பாடம் - 09

## அருளடையாளங்கள்

**தேர்ச்சி 3.0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக்கொண்டு புதுவாழ்வுக்கு சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.3.1** : பக்தியுடனும் ஆர்வத்துடனும் அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- அருளடையாளங்கள் என்றால் என்ன என்பதை விளக்குவர்.
- அருளடையாளங்களின் வழியாக இறையருளைப் பெறுவதற்கு முயற்சி செய்வர்.
- அருளடையாளங்களைப் பற்றி ஆக்கப் பூர்வமான கருத்துக்களை முன்வைப்பர்.
- அருளடையாளங்களைப் பெற்றுக்கொள்ள உற்சாகத்துடன் செயற்படுவர்.
- நண்பர்களை அருளடையாளங்களைப் பெற்றுக்கொள்ளவதற்கு ஊக்குவிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- அச்சிடப்பட்ட சுவரொட்டியைக் காட்சிப் படுத்துங்கள்.
- இதன் வழியாக கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - ஏழு அருளடையாளங்கள்
  - பெற்றுக் கொண்ட அருளடையாளங்கள்
  - ஒன்பதாம் வகுப்பில் பெற வேண்டிய அருளடையாளம்

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப்(சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
  - அருளடையாளங்கள்

- ஏழு அருளடையாளங்கள்
- அருளடையாளங்களின் வகைகள்
- அழியாத முத்திரையைப் பதிக்கின்ற, ஒரு முறை மட்டும் பெறக் கூடிய அருளடையாளங்கள்
- கத்தோலிக்கர்கள் கட்டாயமாக அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- பெரிய குறிப்பிடம் (126, 136-137, 142)
- அச்சிடப்பட்ட சுவரொட்டியொன்று (அருளடையாளங்களை வகைப்படுத்து வதைக் காட்டும்)
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- பெரிய குறிப்பிடத்தில் 136, 137, 126, 142 என்பவற்றை வாசியுங்கள்.
- அவற்றின் ஊடாக வெளிக்கொணரப்படுகின்ற கருத்துக்களை குழுவிலுள்ள ஏனையோருடன் கலந்துரையாடுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினுாடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கீழ் காணப்படும் முன்வைப்புக்குத் தயாராகுங்கள்.
  - குழு 01 -
    - ஏழு அருளடையாளங்களையும் எழுதி, ஒவ்வொரு அருளடையாளத்தின் வழியாகவும் கிடைக்கும் இறையருளை ஆக்க பூர்வமாக வரைந்து காட்டுங்கள்.
  - குழு 02 -
    - அழியாத முத்திரையைப் பதிக்கின்ற அருளடையாளங்கள் பற்றிய கருத்துக்கள் அடங்கிய சுவரொட்டியொன்றை ஆக்குங்கள்.
  - குழு 03 -
    - அருளடையாளங்களின் வகைகளை எடுத்துக்காட்டும் சுவர்ப்பத்திரிகை ஒன்றினை ஆக்குங்கள். மூன்றாம் குழுவினர் அச்சிட்ட சுவரொட்டியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

குறிக்கப்பட்ட வயதில் குறிக்கப்பட்ட அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள்.

## பாடம் - 10

## புகுமுக அருளடையாளங்கள்

**தேர்ச்சி 3.0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக்கொண்டு புதுவாழ்வுக்கு சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.3.2 :** திருமுழுக்கினால் பெற்ற புது வாழ்வை வளர்த்துக் கொள்வர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள் :**

- ஆரம்ப அருளடையாளங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்.
- அருளடையாளங்களின் வழியாக கிறிஸ்தவ வாழ்வு ஊட்டம் பெறுகின்றது என்பதை ஏற்றுக் கொள்வர்.
- சேகரித்த கருத்துக்களை முன்வைப்பர்.
- தாம் பெற்ற புது வாழ்வை விருத்தி செய்வர்.
- நித்தமும் நற்கருணையைப் பெறுவதற்கு நண்பர்களை தூண்டுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 இல் உள்ள நாடகத்தை முன்பே பயிற்சி பெறச் செய்து வகுப்பில் முன்வையுங்கள்.
- இதன் வழியாகக் கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - முதன் முதலில் பெறும் அருளடையாளம் திருமுழுக்காகும்.
    - அதன் பின்னர் நற்கருணையைப் பெறுகின்றோம்.
    - 6 ஆம் வகுப்பு மாணவர் என்ற வகையில் நற்கருணையைப் பெற்றுள்ளோம்.
    - 14 வயதாகும் போது உறுதிப் பூசுதல் எனும் அருளடையாளத்தைப் பெற்றுக் கொள்வோம்

(20 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(60 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப்(சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
  - புகுமுக அருளடையாளங்கள் மூன்று
  - திருமுழுக்கு பெறுவதினால் ஏனைய அருளடையாளங்களைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது.
  - திருமுழுக்கின் வழியாக பெறும் அருங்கொடைகள்
  - திருமுழுக்குக்குப் பயன்படுத்தப்படும் அடையாளங்கள்
  - அவ்வடையாளங்கள் குறிக்கும் கருத்துக்களின் சுருக்கம்
  - நற்கருணை எழுந்தேற்றம்
  - இலன்சியானோ நகர் புதுமை (அருங்குறி)
  - உறுதிப் பூசுதல்
  - பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியாரின் வருகையும் உறுதிப் பூசுதலுடனான தொடர்பும்
  - திருமுழுக்கைப் பெறுவதன் வழியாக ஏனைய அருளடையாளங்களைப் பெற வழி வகுக்கிறது.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாடு (திரு. பணி 2: 1-13)
- பெரிய குறிப்பிடம் (142-147, 155, 162, 164-165)
- இறுவட்டு (DVD) இலஞ்சியானோ புதுமை
- இணைப்பு 1, 2, 3

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- பெரிய குறிப்பிடத்தில் 146, 147, 155, 162, 164, 165, திரு பணி 2: 1-13, இணைப்பு 3 என்பவற்றை வாசியுங்கள்.
- அவற்றின் ஊடாக வெளிக்கொணரப் படுக்கின்ற கருத்துக்களை குழுவிலுள்ள ஏனையோருடன் கலந்துரையாடுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழக் காணப்படும் முன்வைப்புக்குத் தயாராகுங்கள்.
  - குழு 01 -
    - திருமுழுக்கின் வழியாக கிடைக்கப் பெறும் இறையருள், திரு முழுக்கிற்காகப் பயன்படுத்தும் அடையாளங்கள், அவற்றின் கருத்துக்கள் ஆகியன பற்றி குழுவில் கலந்துரையாடி கோவைப்படுத்துங்கள்.
    - திருமுழுக்கின் வழியாக கிடைக்கப் பெறும் இறையருள், திரு முழுக்கிற்காகப் பயன்படுத்தும் அடையாளங்கள் (தண்ணீர், திருத்தைலம், பாஸ்கா மெழுகுவர்த்தி, வெள்ளை நிற ஆடை ஆகியன) உள்ளடக்கப்பட்ட சுவரொட்டி ஒன்றினைத் தயாரியுங்கள்.

- குழு 02 -
  - இணைப்பு 3.2.3 வாசித்து இலன்சியானோ நகரில் நடைபெற்ற நற்கருணை புதுமை பற்றிய தகவல்களை நாடகமாக முன் வைக்கவும்.
- குழு 03 -
  - பெந்தகோஸ்து தினம் பற்றிக் குழுவில் கலந்துரையாடி முக்கிய கருத்துக்களை வெளிக்கொணருங்கள்.

**இணைப்பு 2**

**உரையாடல்**

(தந்தை, தாய், பிள்ளை ஆகியோர் திருமுழுக்குச் சடங்கில் பங்குப் பற்றியவாறு இவ்வாறு உரையாடுகின்றனர்.)

மகன் : ''அப்பா நாங்கள் ஏன் இந்தச் சடங்கிற்கு வந்தோம்? ''

தந்தை : ''இன்று உனது தங்கை திருமுழுக்குப் பெறுகிறாள். எனவே தான் நாம் இங்கு வந்தோம் மகன்''

மகன் : ''அப்பா இது அவ்வளவு முக்கியமா? ஒரு பிரயோசனமும் இல்லை. நான் வீட்டிலிருந்து விளையாடிருக்கலாம்.''

அம்மா : ''ஏன் மகன்! அப்படிச் சொல்லாதீர்கள், இன்று எங்களுக்கு ஒரு முக்கியமான நாள். உனது தங்கை இறைவனின் பிள்ளையாகிறாள். அது எங்களுக்கு மகிழ்ச்சி தானே''

தந்தை : ''உன்னையும் குழந்தையாக இருக்கும் போது உறவினர்களோடு ஆலயத்துக் கொண்டு வந்து திருமுழுக்குக் கொடுத்தோம். அதன் பின்னர் தான் நீ நற்கருணை பெற்றாய்''

அம்மா : ''மகனே! நீ இப்போது எத்தனை அருளடையாளங்களைப் பெற்றுள்ளாய் சொல்லு பார்ப்போம்?''

மகன் : ''திருமுழுக்கு, நற்கருணை, ஒப்புரவு''

தந்தை : ''மகனே! நீ 9ஆம் வகுப்பில் பெறப் போவது என்னவென்று தெரியுமா?''

மகன் : ''ஆம்….ஆம்… உறுதிப் பூசுதல் சரியா?''

தந்தை : ''ஆம் மகனே சரி. திருமுழுக்கு, நற்கருணை, உறுதிப் பூசுதல் என்பன புகுமுக அருளடையாளங்கள் என அழைக்கப்படுகின்றன.''

அம்மா : ''சரி..சரி..அப்பாவும் மகனும் கதையை நிறுத்துங்கள். அதோ குருவானவர் வருகிறார்.''

## இணைப்பு 3

## இலஞ்சியானோ நகரின் நற்கருணைப் பற்றிய புதுமை

கி.பி. 800 ஆம் ஆண்டளவில் இலஞ்சியானோ நகரில் புனித லொகோன்சியன் அடிகளாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட சிறிய ஆலயத்தில் பணியாற்றிய துறவற குருவானவர் ஒருவருக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கும் வேளையில் அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் திரு உடலாகவும், திரு இரத்தமாகவும் மாறுகின்றதென்பதில் சந்தேகம் ஏற்பட்டது. ஒரு நாள் அவர் திருப்பலியில் எழுந்தேற்றம் சடங்கு நடைபெறும் வேளையில் அப்பம் ஒரு இறைச்சி துண்டாகவும், இரசம் திரு இரத்தமாகவும் மாறியதைக் கண்டார். அந்த இறைச்சி துண்டும் இரத்தமும் இலஞ்சியானோ நகரில் விசேட நற்கருணை பேழையொன்றில் வைக்கப்பட்டுள்ளது.

1574 இல் இந்த இறைச்சித் துண்டும் இரத்தமும் பற்றி விஞ்ஞானப் பரிசோதனைச் செய்யப்பட்டது. இந்த விஞ்ஞானப் பரிசோதனையின் போது, உறைந்திருந்த பல்வேறு வடிவங்களைக் கொண்ட பல்வேறு அளவிலன, சம அளவற்ற 5 இரத்தப் பகுதிகள் நிறுக்கப்பட்டன. அப்போது சமமற்ற எல்லா துண்டுங்களினதும் நிறை சமமானது மட்டுமல்ல, ஒவ்வொரு துண்டினது நிறையும், எல்லாத் துண்டுகளும் ஒன்று சேர்த்து நிறுக்கும் போது வரும் நிறைக்கு சமமானது.

1970 இல் இந்த இறைச்சி துண்டைப் பற்றி மேலும் ஒரு விஞ்ஞான ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. இந்த ஆய்வின் போது கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரப்பட்டன.

அவையாவெனில்,

- இந்த இறைச்சித் துண்டும் இரத்தமும் உண்மையிலேயே ஒரு மனிதனுடையதாகும்.
- இது மனித இதயத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒன்றாகும்.
- இவ்விறைச்சித் துண்டிலும் இரத்தத்திலும் உள்ளது ஒரே வகையிலான இரத்தமாகும். அது AB பொசிட்டிவ் வகையாகும்.
- இந்த இரத்தத்தில், இப்போது உடலில் இருந்து எடுக்கப்பட்ட இரத்தத்தில் இருப்பது போல், புரதமும், கனிப்பொருளும் உள்ளது. உடலிலிருந்து வெளியேற்றப்படும் இரத்தத்தில் புரதமும் கனிப்பொருளும் 20 – 30 நிமிடங்கள் வரையிலையே நிறைத்திருக்கும். ஆயினும் இவ்வாறானவை இந்த இரத்தத்தில் தொடர்ந்து வெளியேறாமல் காணப்படுகின்றது.
- இந்த இறைச்சித் துண்டுக்கும் இரத்திற்கும் எவ்வித பாதுகாப்பிற்கான இராசயன பொருட்களும் போடப்படவில்லை.
- இவ்விறைச்சித் துண்டும் இரத்தமும் 12 நுற்றாண்டுகளுக்கு மேல் மூடப்படாமல் இருந்த போதும், அவை பழுதடையவில்லை.

1978 ஆம் ஆண்டளவில் நாசா நிறுவனம் டியுரின் நகர் புனித மேலாடையைப் பற்றிய ஆய்வில் ஈடுப்பட்டது. அப்போது புனித மேலாடையில் AB பொசிட்டிவ் வகையிலான இரத்தம் அதில் பதியப்பட்டுள்ளதாகக் கணப்பட்டது. டியுரின் நகர் புனித மேலாடையிலும் இவ் இறைச்சித் துண்டிலும் ஒரே வகையிலான இரத்தம் இருப்பது கண்டுப்பிடிக்கப்பட்டமை ஒரு முக்கிய விடயமாகும்.

**வீட்டுச் சூழலில் :**

இயலுமான போதெல்லாம் திருப்பலியில் பங்கேற்று நற்கருணையைப் பெற சந்தர்ப்பம் அளியுங்கள்.

## பாடம் - 11

## குணமளிக்கும் அருளடையாளம்

**தேர்ச்சி 3.0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக்கொண்டு புதுவாழ்வுக்கு சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.3.3** : அருளடையாளங்கள் வழியாக ஆன்மீக, உடல் சுகத்தைப் பெறுவர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- குணமளிக்கும் அருளடையாளங்கள் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.
- குணமளிக்கும் அருளடையாளங்கள் வழியாக சுகம் கிடைக்கும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- நோயில் பூசுதல் அருளடையாளத்தைப் பெற இருக்கும் இடத்தினை ஆயுத்தம் செய்வர்.
- பொருத்தமான சந்தர்ப்பங்களில் நோயில் பூசுதல் எனும் அருளடையாளத்தைப் பெறுவர்.
- நோயாளிகளைப் பற்றி பங்குத் தந்தையிடம் அறிவிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 இல் உள்ள பாடலைப் பாடியவாறு தியானத்தில் ஈடுபடுத்துங்கள்.
- இத் தியானத்தின் வழியாக கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - பாடலின் வழியாக கூறப்படும் கருத்துக்கள்
    - குணமளிக்கப்படும் விதம்
    - ஓப்புரவின் வழியாக பாவங்களுக்கு மன்னிப்பு கிடைக்கின்றன
    - வருடத்தில் ஒரு முறையாவது குருவானவரிடம் சென்று பாவங்களை அறிக்கையிட வேண்டும்.
    - நோய் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இறைவனிடம் செபிக்க வேண்டும்.
    - பிறரின் சுக நலனுக்காக நித்தமும் செபிக்க வேண்டும்.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 2 ஆகியவற்றை பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப்(சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
    - ஒப்புரவு அருளடையாளம்
        - நிறுவிய சந்தர்ப்பம்
        - கிடைக்கப் பெறும் இறையருள்
        - பெற வேண்டிய சந்தர்ப்பங்கள்
        - நல்ல பாவ அறிக்கை செய்வதற்கு தேவையான விடயங்கள்
    - நோயில் பூசுதல்
        - கிடைக்கப் பெறும் இறையருள்
        - பெற வேண்டிய சந்தர்ப்பங்கள்
        - இடத்தை ஆயுத்தம் செய்தல்
    - ஆன்மீக, உடல் சுகத்தைப் பெற்றுத் தரும் இவ்வருளடையாளங்கள் குணமளிக்கும் அருளடையாளம் எனப்படும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- பெரிய குறிப்பிடம் (231-232,234-235, 261)
- சிலுவையொன்று, வெள்ளைத்துணி, பஞ்சு, ஒரு விளக்கு, ஒரு தட்டு, ஒரு பாத்திரத்தில் தண்ணீர், ஒரு துவாய், சவர்க்காரப் பெட்டியொன்று
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- பெரிய குறிப்பிடத்தில் 231, 232, 234, 235, 261 இணைப்பு 3, 4 என்பவற்றை வாசியுங்கள்.
- அவற்றின் ஊடாக வெளிக்கொணரப்படுக்கின்ற கருத்துக்களை குழுவிலுள்ள ஏனையோருடன் கலந்துரையாடுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழ் காணப்படும் முன்வைப்புக்குத் தயாராகுங்கள்.
    - குழு 01 -
        - ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக கிடைக்கப் பெறும் இறையருள், பெற வேண்டிய சந்தர்ப்பங்கள், நல்ல பாவ அறிக்கையிடலுக்குத் தேவையான விடயங்கள் என்பன உள்ளடக்கப்பட்ட பக்கப் புரட்டியொன்று தயாரியுங்கள்.
    - குழு 02 -
        - நோயில் பூசுதல் அருளடையாளத்தின் வழியாக பெறுகின்ற இறையருள், கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள், என்பன உள்ளடக்கப்பட்ட சுவரொட்டி ஒன்றினைத் தயாரியுங்கள்.
    - குழு 03 -
        - நோயில் பூசுதல் அருளடையாளத்தை பெற்றுக் கொடுப்பதற்காக இடத்தை ஆயத்தப்படுத்தும் விதத்தினை காட்சிப்படுத்துங்கள்.

## இணைப்பு 2

### தொடும் என் கண்களையே

| | |
|---|---|
| தொடும் என் கண்களையே<br>உம்மை நான் காண வேண்டுமே<br>இயேசுவே உம்மையே நான் காண வேண்டுமே | தொடும் என் உடலினையே<br>உடல் நோய்கள் தீர வேண்டுமே<br>இயேசுவே உடல் நோய்கள் தீர வேண்டுமே |
| தொடும் என் உள்ளத்தையே<br>உள நோய்கள் தீர வேண்டுமே<br>இயேசுவே உடல் நோய்கள் தீர வேண்டுமே | தொடும் என் ஆன்மாவையே<br>என் பாவம் போக்க வேண்டுமே<br>இயேசுவே என் பாவம் போக்க வேண்டுமே |

## இணைப்பு 3

நல்ல பாவ அறிக்கையிடலுக்குத் தேவையான விடயங்கள்

- தான் செய்த பாவங்களை நினைத்தல்
- அவற்றுக்காக மனம் வருந்துதல்
- இனிப் பாவம் செய்வதில்லை என தீர்மானித்தல்
- ஒரு பாவத்தையும் மறைக்காமல் எல்லாப் பாவங்களையும் குருவானவருக்கு அறிக்கையிடல்
- குருவினால் கொடுக்கப்படுகின்ற தண்டனைகளை கடைப்பிடித்தல் (பெரிய குறிப்பிடம் 235)

## இணைப்பு 4

நோயில் பூசுதலுக்கு இடத்தை ஆயத்தம் செய்யும் விதம்

- வீட்டில் நோயாளி இருக்கும் அறை அல்லது வேறு பொருத்தமான இடத்தை துப்பரவு செய்தல். (நோயாளி குருவோடு தனியாகக் கதைக்கக் கூடிய இடம் சிறந்ததாகும்.)
- அவ்விடத்தில் மேசையொன்றை வைத்து வெள்ளைத் துணியை விரித்தல்.
- மேசையின் மேல் ஒரு சிலுவையும், எரிகின்ற விளக்கும் வைத்தல்.
- பஞ்சு, தட்டு, தண்ணீர் பாத்திரம், துவாய், சவர்க்காரப் பெட்டி என்பனவற்றை மேசைக்கு அருகில் வைத்தல்.

**வீட்டுச் சூழலில் :**

குற்றம் புரியும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒப்புரவு செய்ய ஊக்குவியுங்கள்.

## பாடம் - 12

## பணி வாழ்வின் அருளடையாளங்கள்

**தேர்ச்சி 3.0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக்கொண்டு புதுவாழ்வுக்கு சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.3.4** : பங்கிலும், குடும்பத்திலும் தமது பொறுப்புகளையும் கடமைகளையும் ஒழுங்கு முறையுடன் நிறைவேற்றுவர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- பணிக்காக அமைக்கப்பட்ட அருளடையாளங்கள் பற்றி விளக்குவர்.
- தமது பெற்றோருக்கு உதவுவதற்கு முன் வருவர்.
- குடும்பத்தில் பிள்ளைகளின் பொறுப்புக்கள், கடமைகள் பற்றிக் கோவைப்படுத்திய கருத்துக்களை ஆக்கமாக முன் வைப்பர்.
- பங்குப் பணிகளில் பங்குபற்றுவர்.
- தமது பங்குத் தந்தைக்கும் பெற்றோருக்கும் மதிப்பளிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- தரவிருத்தி உள்ளீடுகளில் உள்ள புகைப்படங்களைப்பற்றி கேட்டறிவதோடு, கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - ஒரு குருவின் கடமைகள்
  - அவர்கள் பங்குக் குடும்பங்களைப் பாதுகாத்துப் பராமரிக்கின்றனர்.
  - தந்தையினதும் தாயினதும் கடமைகள்
  - இவர்கள் தமது குடும்பத்தைப் பாதுகாத்துப் பராமரிக்கின்றனர்.
  - குருமார்களினதும் பெற்றோகளினதும் கடமைகளை வெற்றியடையச் செய்வதற்கு உதவ வேண்டும்.

(20 நிமிடங்கள்)

படி 2

- எல்லா மாணவர்களுக்கும் இணைப்பு 1 ஐப் பெற்றுக் கொடுங்கள்.(பாடம் ஆரம்பிப்பதற்கு முன் வாரத்தில் செய்ய வேண்டும்)
- பாடத்தைக் கற்பிக்கின்ற தினத்தில் பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் திரு விவிலியம் ஒவ்வொன்றைப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளைக் கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(60 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு மாணவரும் தயாரித்த அறிக்கைக் கேற்ப குழுவினரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் குழுவுக்கு, முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு அறிக்கை பற்றியும் ஏனைய குழுக்களின் ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப்(சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
    - குருத்துவத்தை நிறுவிய தினம்
    - குருத்துவத்துக்கு அழியாத முத்திரை பதிக்கப்படுகிறது.
    - குருத்துவம் ஒரு முறை மட்டும் பெறக்கூடிய அருளடையாளமாகும்.
    - குருக்களின் பணிகள்
    - கிறிஸ்தவப் பிள்ளை என்ற வகையில் குருக்களின் பணிகளுக்கு எமது பங்களிப்பு
    - திருமணத்தை நிறுவுதல்
    - குடும்பத்தில் பிள்ளைகளினது பொறுப்புக்களும் கடமைகளும்
    - குருத்துவமும் திருமணமும் பணிக்காக நிறுவப்பட்ட அருளடையாளங்களாகும்.
    - இவற்றில் ஒரு பணிக்காக மாணவர்கள் அழைக்கப்படுகின்றார்கள்.

(40 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திரு விவிலியம் (லூாக்கா 22:19, தொடக்க நூல் 2:12, 2:24, மாற்கு 10:6-9, சீராக் 3:12-16, 7:27-28, கொலோசையர் 3:20, எபேசியர் 6:1)
- குருவானரும் பங்கு மக்களும் இருக்கின்ற புகைப்படம், பெற்றோர்களுடன் பிள்ளைகள் இருக்கின்ற புகைப்படம் அல்லது படம்.
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்களுக்குக் கிடைத்துள்ள திருவிவிலிய வாசகங்களை நன்றாக வாசியுங்கள்.
- அவற்றின் ஊடாக வெளிக்கொணரப்படுக்கின்ற கருத்துக்களையும் ஏனைய கருத்துக்களையும் உள்ளடக்கி சுய அறிக்கையொன்றைத் தயாரியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு கீழ் காணப்படும் முன்வைப்புக்குத் தயாராகுங்கள்.
    - குருத்துவத்தை நிறுவிய விதம் - லுக்கா 22: 19
    - குருக்களின் பணிகள்
    - குருக்களுக்கு நாம் எவ்வாறு உதவலாம்.
    - திருமணத்தை நிறுவிய முறை - தொடக்க நூல் 2: 12, 2: 24, மாற்கு 10: 6-9
    - சீராக் 3: 12-16, 7: 27-28, கொலோசையர் 3: 20, எபேசியர் 6: 1 ஆகிய வாசகங்களுக்கேற்ப குடும்பத்தில் பிள்ளைகளின் கடமைகள், பொறுப்புக்கள்.
- சுயமாக தயாரிக்கப்பட்ட அறிக்கைக் கேற்ப குறிக்கப்பட்ட நாளில் குழுக் கலந்துரையாடலை நடாத்தி, குழு அறிக்கையொன்றைத் தயாரித்து வகுப்பில் முன்வையுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

தமது பெற்றோருக்கும் பங்குத் தந்தைக்கும் கீழ்ப்படிந்து நடக்கப் பிள்ளைகளை வழிநடத்துங்கள்.

## பாடம் - 13

## பத்துக் கட்டளைகள்

**தேர்ச்சி 4.0** : இறை கட்டளைகளைக் கடைபிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.4.1** : பத்துக் கட்டளைகளின்படி தமது வாழ்வை அமைத்துக் கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள் :**

- இறைவன் மோசேக்கு பத்துக்கட்டளைகளைக் கொடுத்த வழிமுறைகள் பற்றிய விடயங்களைக் தொகுப்பர்.
- பத்துக்கட்டளைகளின் படி வாழ வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- பத்துக்கட்டளைகளின் படிப்பினைகளை ஆக்கமொன்றின் மூலம் முன்வைப்பர்.
- ஒழுக்கமுள்ளவராக வாழ்வர்.
- சகோதர அன்புடன் செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- மாணவர்கள் எல்லோரும் காணும் வண்ணம் படத்தை காட்சிப் படுத்துங்கள்.
- அது தொடர்பாக கலந்துரையாடி கருத்துக்களைப் பரிமாறுங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - இஸ்ராயேல் மக்களை ஒழுக்கமுள்ள மக்களாக உருவாக்குவதற்காக இக் கட்டளைகள் கொடுக்கப்பட்டன.
  - ஒவ்வொரு கட்டளையையும் பெயரிடுதல்
  - பத்துக்கட்டளைகள் எக்காலத்திற்குமுரிய ஒரு சட்டமாகும்.
  - அக்கட்டளைகளை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும்.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப்(சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
  - பத்துக் கட்டளைகளின் அறிமுகம்
    - சீனாய் மலையில் இறைவன் மோசேக்கு பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார். (பெரிய குறிப்பிடம் 295)
    - 40 நாட்கள் மன்றாடிய பின் மோசேக்கு
    - ஒவ்வொரு கட்டளையையும் பெயரிடுதல் (வி.ப. 20: 3-17, இ. ச. 5: 6-22)
    - பத்துக்கட்டளையின் இரு பகுதிகள்
  - முதற் கற்பலகையில் முதல் மூன்று கட்டளைகள்
  - இரண்டாம் கற்பலகையில் நான்கு தொடக்கம் பத்து வரையுள்ள கட்டளைகள்
  - ஒழுக்கமுள்ள மனிதனாக வாழ்வதற்கு இக் கட்டளைகள் உதவுகின்றன.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் விடுதலைப் பயணம் 20: 3-17, 31: 18, 34: 28, இணைச் சட்டம் 4: 13-14, 5: 6-22
- சீனாய் மலையில் இறைவன் மோசேக்கு பத்துக் கட்டளைகளைக் கொடுத்த படம்
- டிமைன் தாள், மாக்கர் பேனா
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- (வி.ப. 20: 3-17, 31: 18, 34: 28, இ. ச. 4: 13-14, 5: 6-22) ஆகிய விவிலியப் பகுதிகளை நன்றாக வாசியுங்கள்.
- அதைப் பற்றி குழுவிலுள்ள ஏனையோருடன் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடிப் பெற்ற தகவல்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழுவினர் தொகுத்துப் பெற்றுக் கொண்ட விடயங்களை அடிப்படையாக் கொண்டு குழுச் செயற்பாட்டை முன்வைக்கத் தயாராகுங்கள்.

**இணைப்பு 2**

**குழு ஆய்வுப் பத்திரம்**

- குழு 01 -
  - பத்துக் கட்டளைகளை ஒழுங்குமுறைப்படி அழகாக எழுதி போஸ்டர் ஒன்றின் மூலம் முன்வையுங்கள்.
- குழு 02 -
  - சீனாய் மலையில் இறைவன் மோசேக்கு பத்துக் கட்டளைகளை வழங்கிய சம்பவத்தை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

அன்றாட குடும்ப செபத்தின் போது குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொரு கட்டளையின் படி வாழ்ந்தார்களா என்பதைப் பற்றி கலந்துரையாடுங்கள்.

## பாடம் - 14

## இறை அன்பு

**தேர்ச்சி 4.0** : இறை கட்டளைகளைக் கடைபிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.4.2** : ஒரே கடவுளுக்கு மட்டுமே ஆராதனைச் செய்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- முதல் இரண்டு கட்டளைகளையும் முழுமையாக கடைப்பிடிப்பதற்கான செயற்பாடு களைத் தொகுப்பர்.
- பிற சமய ஆராதனைகளில் ஈடுபடாதிருக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- முதல் இரு கட்டளைகளுக்கு எதிரான செயல்களை ஒரு ஆக்கமாக சமர்ப்பிப்பர்.
- ஒரே இறைவனை மட்டும் ஆராதிப்பர்.
- பிற சமயங்களுக்கு மதிப்பளிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- போஸ்ரரை மாணவர்கள் எல்லோரும் பார்க்கக் கூடியதாக காட்சிப் படுத்துங்கள்.
- அதில் அடங்கியுள்ளவற்றை கலந்துரையாடி கருத்துக்களைப் பரிமாறுங்கள்.
- பின் வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - இவை இறைவனுக்கு ஏற்புடைய செயற்பாடுகள் அல்ல
  - எனவே அச்செயற்பாடுகளிலிருந்து விலகியிருத்தல்
  - முதல் இரு கட்டளைகளைப் பெயரிடுதல்
  - போஸ்டரில் குறிக்கப்பட்ட செயல்கள் முதலிரு கட்டளைகளுக்கும் எதிரானவை

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
  - முதலாம் கட்டளை கடவுளாகிய ஆண்டவரை மட்டுமே பணிந்து ஆராதிக்க வேண்டுமெனக் கூறுகின்றது.(இ.ச. 5: 7-8, பெரிய குறிப்பிடம் 303,304)
  - முதலாம் கட்டளையை முழுமையாக கடைப்பிடிப்பதற்கு செய்ய வேண்டியவை
  - முதலாம் கட்டளைக்கேற்ப நாம் தவிர்க்க வேண்டியவை
    - ஒரு தனி நபரையோ அல்லது பொருளையோ கடவுளாக மதிப்பது தவறாகும். (பெரிய குறிப்பிடம் 312)
    - பேய்களையும் பொய்க் கடவுள்களையும் விசுவசிப்பது பிழையான செயலாகும்.
    - சிலைவழிபாடு, பொய்யான விசுவாசம், குருட்டுப் பக்தி, பில்லி, சூனியம், மந்திரம், நூல் கட்டுதல் சகுணம் சுப நேரம் பார்த்தல் என்பன இறைவனுக்கு எதிரானவையாகும். (பெரிய குறிப்பிடம் 313)
  - இரண்டாம் கட்டளை கடவுளாகிய ஆண்டவருடைய திருப்பெயரை வீணாகப் பயன்படுத்தலாகாது எனக் கூறுகின்றது. (இ.ச. 5: 11)
  - உண்மைக்காக மட்டும் நீதிமன்றத்தில் கடவுளின் பெயரால் சத்தியம் செய்தல்
  - இரண்டாம் கட்டளைக்கேற்ப தவிர்க்க வேண்டியவை
    - கடவுளின் பெயரால் பொய்ச்சத்தியம் செய்வது
    - பரிசுத்தமானவற்றை அவமதிப்பது
    - பொருத்தனையை நிறைவேற்றாதிருப்பது

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் இணைச் சட்டம் 5: 7-8, 5: 11
- பெரிய குறிப்பிடம் 303 - 310
- முதல் இரண்டு கட்டளைகளுக்கும் எதிரான செயற்பாடுகள் அடங்கிய போஸ்டர் ஒன்று
- டிமைன் தாள், பிளாற்றினம்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- இ. ச. 5: 7-8, 5: 11, பெரிய குறிப்பிடம் 303-310 ஆகிய பகுதிகளை நன்றாக வாசியுங்கள்.
- அதைப் பற்றி குழுவிலுள்ள ஏனையோருடன் கலந்துரையாடுங்கள்.
- உங்கள் குழுவினர் தொகுத்துப் பெற்றுக் கொண்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு குழு செயற்பாட்டை முன்வைக்கத் தயாராகுங்கள்.

**இணைப்பு 2**

**குழு ஆய்வுப் பத்திரம்**

- குழு 01 -
  - முதலாம் கட்டளைகளுக்கு எதிரான செயற்பாடுகளைப் பட்டியற் படுத்தி போஸ்டர் ஒன்றை தயாரியுங்கள்.
- குழு 02 -
  - இறைவனை ஆராதிப்போம் என்ற தலைப்பில் கவிதை அல்லது கட்டுரை ஒன்றை எழுதுங்கள்.
- குழு 03 -
  - முதலாம் கட்டளைக்கு எதிராக செயற்படும் ஒருவருக்கு நீர் கூறும் அறிவுரைகளை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.
- குழு 04 -
  - இரண்டாம் கட்டளைக்கு எதிராக செயற்படும் ஒருவருக்கு நீர் கூறும் அறிவுரைகளை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

சிலை வழிபாடுகளை தவிர்த்துக் கொள்ள கற்றுக் கொடுங்கள்.

## பாடம் - 15

## ஞாயிறு தினத்தைத் தூய்மையாகக் கடைபிடிப்போம்

**தேர்ச்சி 4.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.4.3** : ஞாயிறு தினத்திலும் கடன் திருநாட்களிலும் திருப்பலியில் பங்குக்கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- ஞாயிறு தினத்தை புனிதமாக அனுசரிக்க செய்ய வேண்டிய நற்செயல்களை தொகுத்துக் கூறுவர்.
- ஞாயிறு தினத்தை புனிதமாக அனுசரிக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- ஞாயிறு தினத்தில் செய்யக்கூடாதவைகளை ஆக்கமொன்றினால் முன்வைப்பர்.
- ஞாயிறு தினத்திலும் கடன் திருநாட்களிலும் முழுத்திருப்பலியில் பக்தியுடன் பங்குக்கொள்வர்.
- நண்பர்களுடன் ஞாயிறு திருப்பலியில் தவறாது பங்குக்கொள்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இறை மக்கள் குடும்பமாக திருப்பலியில் பங்கு கொள்ளும் படத்தை காட்சிப் படுத்துங்கள்.
- படத்தில் அவதானித்தவற்றை மாணவரிடம் கேட்டு அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - ஞாயிறு தினம் ஆண்டவருக்குரிய நாள்
  - ஞாயிறு தினம் கடன் திருநாள்
  - அந்நாளை புனிதமாக அனுசரிக்க வேண்டும்

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 2 ஆகியவற்றை பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.

  - ஞாயிறு தினத்தில் கிறிஸ்துவின் உயிர்ப்பை நினைவு கூருகின்றோம்.

  - ஞாயிறு தினங்களில் நாம் செய்ய வேண்டியவை (பெரிய குறிப்பிடம் 332)

    - ஞாயிறு தினங்களில் முழுத் திருப்பலியில் பங்குபற்றல்
    - மறைக் கல்வி வகுப்புகளில் பங்கு கொள்ளல்
    - அவசியமற்ற கடின உடல் உழைப்பினைத் தவிர்த்தல்
    - நற்செயல்கள் புரிதல், அயலவனுக்கு உதவுதல்
    - பங்கிலுள்ள பக்தி சபைகளில் பங்குபற்றல்
    - குடும்பத்தாரோடு ஒற்றுமையை கட்டியெழுப்புதல் (உ+ம் குடும்பமாக உணவருந்துதல், கருத்துக்களைப் பரிமாறி சந்தோசமாக வாழ்தல்)

  - செய்யக்கூடாதவை

    - தீய பழக்கங்களில் ஈடுபடல் சூதாட்டம் குடிப்பழக்கம்
    - ஞாயிறு தினங்களில் திருப்பலிக்குச் செல்லாமல் மேலதிக வகுப்புகளுக்குச் செல்லல்
    - உல்லாசப் பயணங்கள் செல்லுதல்
    - மேலதிகமாக பணம் சம்பாதிக்க ஓய்வின்றி உழைத்தல்

  - கடன் திருநாட்களும் அதற்குரிய தினங்களும் (பெரிய குறிப்பிடம் 375)

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் விடுதலை பயணம் 20: 8-11
- பெரிய குறிப்பிடம் 332 - 375
- இறை மக்கள் குடும்பமாக திருப்பலியில் பங்குக் கொள்ளும் படம்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- வி.ப. 20: 8-11, பெரிய குறிப்பிடம் 332, 375 ஆகிய பகுதிகளை நன்றாக வாசியுங்கள்.
- அதைப் பற்றி குழுவிலுள்ள ஏனையோருடன் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களைத் தொகுத்துக் கொள்ளுங்கள்.

- உங்கள் குழுவினர் தொகுத்துப் பெற்றுக்கொண்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு குழு செயற்பாட்டை முன்வைக்கத் தயாராகுங்கள்.

## இணைப்பு 2

## குழு ஆய்வுப் பத்திரம்

- குழு 01 -
  - ஞாயிறு தினத்தில் செய்ய வேண்டியவை, தவிர்க்க வேண்டியவைகளை அட்டவணைப் படுத்துங்கள்.
- குழு 02 -
  - ஞாயிறு தினத்தில் செய்யக்கூடிய நற்செயல்களை சுவரொட்டி ஒன்றின் மூலம் முன்வையுங்கள்.
- குழு 03 -
  - ஞாயிறு திருப்பலியில் பக்தியுடன் பங்குக்கொள்ள செய்ய வேண்டிய செயல் முறைகள் ஐந்து எழுதுங்கள்.
- குழு 04 -
  - இலங்கையில் அனுசரிக்கப்படும் கடன் திருநாட்களையும் அதன் தினங்களையும் நிரைப்படுத்துங்கள்.
- குழு 05 -
  - ஞாயிறு திருப்பலிக்குச் செல்லாமலும், மறைக்கல்வி வகுப்பிற்குச் செல்லாமலும் மேலதிக வகுப்பிற்குச் செல்லும் உமது நண்பன் அல்லது நண்பிக்கு நீர் கூறும் அறிவுரைகளை நாடகமாக முன்வையுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

குடும்பமாக ஒவ்வொரு ஞாயிறு தினத்திலும் கடன் திருநாட்களிலும் திருப்பலியில் பங்கு பற்றுங்கள்.

## பாடம் - 16

## சகோதர அன்பு

**தேர்ச்சி 4.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.4.4** : அயலவர்களை அன்பு செய்து வாழ்வர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள் :**

- 5ம், 7ம், 8ம் கட்டளைகளால் கூறப்படும் செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவைகளை அட்டவணைப் படுத்துவர்.
- எப்போதும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- அட்டவணைப் படுத்திய தகவல்களை ஆக்கமொன்றின் மூலம் முன்வைப்பர்.
- சகோதர அன்புடன் வாழ்வர்.
- பிறரை மதித்து வாழ்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- மாணவர்கள் எல்லோரும் காணும் வண்ணம் போஸ்டரைக் காட்சிப் படுத்துங்கள்.
- போஸ்டரிலுள்ள தலைப்புச் செய்திகள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடிக் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - தற்போதைய சமூகத்தினுள் இவ்வாறான செயற்பாடுகள் தினந்தோறும் இடைபெறுகின்றது.
  - நான்கு தொடக்கம் பத்து வரையிலான கட்டளைகளைப் பெயரிடுக.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 2 ஆகியவற்றை பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(55 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.

  - பத்துக்கட்டளைகளில் நான்கு தொடக்கம் 10 வரையுள்ள ஏழு கட்டளைகளும் பிறருக்குச் செய்ய வேண்டிய செய்யக்கூடாத செயல்களைப் பற்றி கூறுகிறது.
  - இக் கட்டளைகள் பிறரை அன்பு செய்து வாழக் கடைபிடிக்க வேண்டிய வழிகளை எடுத்துக் கூறுகின்றன.
  - ஐந்தாம் கட்டளைக்கேற்ப செய்ய வேண்டியவை (பெரிய குறிப்பிடம் 339)
    - உயிர் இறைவன் தந்த விலை மதிக்க முடியாத கொடை
    - அதை பாதுகாப்பது நமது கடமையும் பொறுப்புமாகும்
    - இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்.
    - குடும்பத்தாரோடு நல்லுறவை வளர்த்தல்
  - தவிர்க்க வேண்டியவை (பெரிய குறிப்பிடம் 340)
    - கொலை செய்தல், தற்கொலை செய்தல், சண்டைப் பிடித்தல்
    - பிறரை வார்த்தையால் வதைத்தல்
    - பிறரைப்பற்றி அவதூறு கூறுவது
    - கோள் சொல்லுதல்
    - பிறரின் நற்பெயரை கெடுத்தல்
  - ஏழாம் கட்டளைக்கேற்ப செய்ய வேண்டியவை
    - பிறருக்கு சொந்தமான உடமைகளைப் பாதுகாத்தல்
    - இரவல் வாங்கிய பொருளையும் கடனையும் குறித்த காலத்தில் திருப்பிக்கொடுக்க வேண்டும்.
    - கண்டெடுத்த பொருளை உரியவரிடம் சேர்த்துவிட முயல வேண்டும்.
  - தவிர்க்க வேண்டியவை (பெரிய குறிப்பிடம் 359)
    - திருடுவது, கொள்ளையடிப்பது
    - கண்டெடுத்த பொருளை உரியவரிடம் சேர்க்காமல் தனதாக்கிக்கொள்வது
    - வாங்கிய கடனை திருப்பி கொடுக்காமல் இருப்பது
    - செய்த வேலைக்கு சரியான கூலி கொடுக்காமல் இருப்பது
    - கலப்படம் செய்து விற்பது, மோசடி, பதுக்கல், லஞ்சம், வஞ்சகம் செய்தல்
  - எட்டாம் கட்டளைக்கேற்ப செய்ய வேண்டியவை (பெரிய குறிப்பிடம் 368)
    - இறைவனைப்போல் உண்மையுள்ளவராய் இருத்தல்
    - உண்மையுள்ளவர்களை மனிதர்கள், விரும்புவார்கள், நம்புவார்கள்
    - உண்மை பேசுவது மதிப்பிற்குரியது
    - நமக்கும் பிறருக்குமிடையே நல்லுறவை வளர்க்கின்றது.
  - தவிர்க்க வேண்டிய
    - பொய் சொல்லுதல் பாவமாகும்
    - முறையற்ற தீர்ப்பிடுதல்
    - பொய்க்குற்றம் சாட்டுதல்
    - தனது பிழைகளை பிறர் மேல் சுமத்துதல்
    - பிறர்மேல் பழிசுமத்தல்

(50 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- பெரிய குறிப்பிடம் 339, 340, 359, 368, 369
- கட்டளைகள் 5, 7, 8 க்கு(கொலை, களவு, உண்மை) எதிரான செயல்கள் அடங்கிய பத்திரிகைத் தலைப்புச் செய்திகள் கொண்ட போஸ்டர்.
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- பெரிய குறிப்பிடம் 339, 340, 359, 368, 369 பகுதியை நன்றாக வாசியுங்கள்.
- வாசிக்கப்பட்ட விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களைத் தொகுத்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழுவினர் தொகுத்துப் பெற்றுக் கொண்ட விடயங்களை அடிப்படையாக் கொண்டு உங்கள் குழுவுக்குரிய குழுச் செயற்பாட்டை முன்வைக்கத் தயாராகுங்கள்.

**இணைப்பு 2**

**குழு ஆய்வுப் பத்திரம்**

- குழு 01 -
  - ஐந்தாம் கட்டளைக்கு எதிராக சமூகத்தில் நடைபெறும் செயல்களை ஆக்க பூர்வமாக முன்வையுங்கள்.
- குழு 02 -
  - ஏழாம் கட்டளையால் கூறப்படும் செய்ய வேண்டியவை செய்யக் கூடாதவைகளை ஆக்கம் ஒன்றின் மூலம் முன்வையுங்கள்.
- குழு 03 -
  - எட்டாம் கட்டளையால் செய்யவேண்டியவை தவிர்க்க வேண்டியவற்றை ஆக்கமொன்றினால் முன்வையுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க பங்களிப்புச் செய்யுங்கள்.

## பாடம் - 17

## பகைவரை அன்பு செய்வோம்

**தேர்ச்சி 4.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.4.5** : எமக்கெதிராகக் குற்றம் செய்தோரை மன்னித்து வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

**(கீழ் காணும் கற்றல் பேறுகளின் வழியாகத் தயாராகுங்கள்.)**

- பகைவரை மன்னித்தல் தொடர்பான தகவல்களையும் படிப்பினைகளையும் தொகுப்பர்.
- பகைவரை மன்னிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- தொகுத்தவற்றை ஆக்கமொன்றினால் முன்வைப்பர்.
- பகைவரை அன்பு செய்வர்.
- பகைவர்களையும் நண்பர்களாக மாற்றுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 இல் உள்ள பாடலை ஒலிக்கச் செய்யுங்கள்.
- பாடல் எழுதிய அட்டையைக் காட்சிப் படுத்தி, பாடலைக் காட்சிப்படுத்தி எல்லோரும் சேர்ந்து பாடலை பாடுங்கள்.
- பாடலில் அவதானித்தவற்றை மாணவரிடம் கேட்டு அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- இவற்றை அடிப்படையாகக் கொண்டு, பின் வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - ○ நண்பரைப் போல் பகைவரையும் அன்பு செய்தல்
  - ○ தவறு செய்வது மனிதத்தன்மை, மன்னிப்பது இறைத்தன்மை
  - ○ பிறர் செய்த தவறுகளை நாம் மன்னிக்க வேண்டும்
  - ○ நாம் செய்யும் தவறுகளுக்கும் பிறரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
    - மோசேயின் சட்டம் (மத்தேயு 5: 38-41), வி.ப.21: 24)
    - இயேசு தீமை செய்வோரை மன்னிக்குமாறு ஒரு புதிய நெறியைத் தருகிறார். (மத்தேயு 5: 38-41)
    - இயேசு தம் சீடர்கள் பகைவர்களை அன்பு செய்யவும் அவர்களுக்காகச் செபிக்கவும் வேண்டுமென்று விரும்பினார். (மத்தேயு 5: 43-48)
    - இயேசு சிலுவையில் தொங்கும் போதும் தமக்கு தீமை செய்தோரை மன்னித்தார். (லூக்கா 23: 24)
    - ஸ்தேவான் மீது கல்லெறிந்த போதும் அவர் அவர்களை மன்னிக்குமாறு இறைவனிடம் வேண்டினார். (திருப்பணி 7: 60)
    - திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் தன்னை துப்பாக்கியால் சுட்ட அலிஹக்காவை மன்னித்தார்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் மத்தேயு 5: 38-41, 5: 43-48, லுக்கா 23: 24, திருப்பணி 7: 60
- பாடல் எழுதிய அட்டை அல்லது ஒலி நாடா
- ஒலிப் பேழை (Cassette Player)
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- மத்தேயு 5: 38-41, 5: 43-48, லுக்கா 23: 24, திரு.பணி 7: 60 போன்ற திருவிவிலியப் பகுதிகளை நன்றாக வாசியுங்கள்.
- வாசிக்கப்பட்ட எல்லா விடயங்களைப் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களைத் தொகுத்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழுவினர் தொகுத்துப் பெற்றுக் கொண்ட விடயங்களை அடிப்படையாக் கொண்டு ஆக்கமொன்றை முன்வைக்கத் தயாராகுங்கள்.

**இணைப்பு 2**

**என் பகைவருக்கும் எனக்கும்**

என் பகைவருக்கம் எனக்கும்
பாலம் ஒன்று அமைப்பீரே
இயேசுவே... இயேசுவே.. - 2

அந்தப் பாலத்தில் நான் நடக்க
பலம் தாரும் என் இயேசுவே – என்

என் பகைவரை அன்பு செய்ய
அன்பைத் தாரும் என் இயேசுவே – என்

என் பகைவரை ஏற்றுக் கொள்ள
மனம் தாரும் என் இயேசுவே – என்

என் பகைவரை நான் மன்னிக்க
வரம் தாரும் என் இயேசுவே – என்

**வீட்டுச் சூழலில் :**

குடும்பத்தில் தம்மை வெறுப்போருடன் அன்பாக பழகுங்கள்.

## பாடம் - 18

## திருச்சபையின் கட்டளைகள்

**தேர்ச்சி 4.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.4.6 :** திருச்சபையின் கட்டளைகளைக் கடைபிடிப்பர்.

**பாடவேளை** : 01

**கற்றல் பேறுகள் :**

- திருச்சபையின் கட்டளைகள் பற்றிய தகவல்களை தொகுத்துக் கொள்வர்.
- திருச்சபையின் கட்டளைகளை பின்பற்ற வெண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- தொகுத்தவற்றை ஆக்கப்பூர்வமாக முன்வைப்பர்.
- திருச்சபையின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பர்.
- திருச்சபையின் தாபரிப்புக்கு உதவுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- பாடசாலை சட்டத்திட்டங்களை மாணவரிடம் கேட்டு கரும்பலகையில் அட்டவணைப் படுத்துங்கள்.
- அவற்றை யார்? ஏன்? கடைப்பிடிக்க வேண்டுமென்பதை கேட்டறியுங்கள்.
- கத்தோலிக்கர் எந்த சபையை சார்ந்தவர்கள் என வினவுங்கள்.
- இவற்றை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - கத்தோலிக்கர் கத்தோலிக்க திருச்சபைக்குச் சொந்தமானவர்கள்
    - திருச்சபையின் அங்கத்தவர் என்ற வகையில் திருச்சபையின் கட்டளைகளை கடைப்பிடிப்பது எமது கடமை

(10 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(20 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன்படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
    - திருச்சபையின் கட்டளைகள் ஐந்து (பெரிய குறிப்பிடம் 373)
    - ஒவ்வொரு கட்டளையையும் பற்றிய அறிமுகம் (பெரிய குறிப்பிடம் 379-384)

(10 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- பெரிய குறிப்பிடம் 373, 379 - 384
- திருச்சபையின் கட்டளைகள் எழுதிய சுவரொட்டி
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- பெரிய குறிப்பிடம் 373, 379 – 384 வரையுள்ள பகுதிகளை நன்றாக வாசியுங்கள்.
- வாசிக்கப்பட்ட எல்லா விடயங்களைப் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களைத் தொகுத்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழுவினர் தொகுத்துப் பெற்றுக் கொண்ட விடயங்களை அடிப்படையாக் கொண்டு ஆக்கமொன்றை முன்வைக்கத் தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

குறிப்பிட்ட நாட்களில் ஒரு சந்தி சுத்த போசனம் அனுசரியுங்கள்.

## பாடம் - 19

## செபம்

**தேர்ச்சி 5.0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.5.1** : ஊக்கத்தோடு செபிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- இடைவிடாமலும் தாழ்மையோடும் செபிப்பதன் முக்கியத்துவம் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.
- இடைவிடாமல் செபிப்பதன் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்வர்.
- கோவைப்படுத்திய கருத்துக்களை ஆக்கபூர்வமாக முன் வைப்பர்.
- செபிக்கும் போது சரியான முறையை (கைகளைக் கூப்பிச் செபித்தல் போன்ற) பயன்படுத்துவர்.
- அன்றாட வாழ்வில் பிறரை இழிவாக கருதமாட்டார்கள்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 1 இல் உள்ள உரையாடலை முற்பயிற்சியோடு வகுப்பில் முன் வைக்கச் செய்யுங்கள்.
- அதன் வழியாக பின் வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - ○ கிறிஸ்தவ வாழ்வில் செபம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.
  - ○ இடைவிடாது செபிக்க வேண்டும்.
  - ○ மனந்தளராமல் செபிக்க வேண்டும்.
  - ○ செபத்தின் வழியாக நன்மைகளை மட்டும் நாம் பெறுகின்றோம்.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாடு, இணைப்பு 1 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(35 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு குழுவினருக்கும் கிடைத்துள்ள உவமையை நடிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- உவமையை நடிக்கும் போது தவறவிட்டவை பற்றிய கருத்துக்களை முன் வைப்பதற்கு குழுக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
  - செபம் எனப்படுவது
  - நள்ளிரவில் சென்று அப்பம் கேட்ட நண்பனின் உவமை (லூக்கா 11: 5-8)
  - நேர்மையற்ற நடுவர் பற்றிய உவமை (லூக்கா 18: 1-8)

- இறைவன் இரக்கமுள்ள தந்தையாவார்.
- அவர் எமக்கு தேவையானவற்றை தருவார்.
- இடைவிடாது செபிப்பதன் முக்கியத்துவம்
- பரிசேயரும் வரி தண்டுபவரும் பற்றிய உவமை (18: 9-14)
- இறைவன் எம்மை அறிகிறார், எனவே செபிக்கும் போது எம்மைப் பற்றிப் புகழ வேண்டியது இல்லை.
- எமது பலவீகங்களை இறைவன் முன் ஏற்றுக் கொள்ள வேண்டும்
- செபிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் (கைகளைக் கூப்பிச் செபித்தல் போன்ற)
- எமது பலவீனங்களை ஏற்றுக் கொள்ளல், செப வழிமுறைகள் (கைகளைக் கூப்பிச் செபித்தல் போன்ற) வழியாக எமது தாழ்ச்சி வெளிப்படுத்தப்படுகிறது.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாடு (லூாக்கா 11: 5-8, 18: 1-8, 18: 9-14)
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குக் கிடைத்துள்ள திருவிவிலியப் பகுதிகளை நன்றாக வாசியுங்கள்.
- அப்பகுதியில் இருந்து பெற்றுக் கொள்ளும் கருத்துக்களை குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- குறிக்கப்பட்ட உவமையை நடிப்பதற்குத தயாராகுங்கள்.
  - குழு 01 - (லூாக்கா 11: 5-8)
  - குழு 02 - (லூாக்கா 18: 1-8)
  - குழு 03 - (லூாக்கா 18: 9-18)

**இணைப்பு 2**

**உட்பிரவேசத்திற்கான உரையாடல்**

அக்கா : தம்பி, நாங்கள் விளையாடப் போவோமா?

தம்பி : என்னால் முடியாது அக்கா

அக்கா : ஏன் தம்பி அப்படிச் சொல்கிறாய் ஏதும் பிரச்சினையா?

தம்பி : என்னவோ தெரியாது.......(பெருமூச்சுவிட்டு) எனக்குப் பரீட்சையில் புள்ளிகள் குறைவு அக்கா.

அக்கா : தம்பி பரீட்சைக்கு நீ படித்தாயா?

தம்பி : ஓம், அக்கா நான் படித்தேன்.

அக்கா : படித்தால் மட்டும் போதாது, படிபப்பதற்கு முன் செபித்தீரா?

தம்பி : இல்லை அக்கா!

அக்கா : நான் என்றால் ஒவ்வொரு நாளும் செபம் சொல்லிவிட்டுத்தான் படிப்பேன். எனக்கு நன்றாக ஞாபகமும் இருக்கும், புள்ளிகளும் கிடைக்கும்.

**வீட்டுச் சூழலில் :**

அடிக்கடி செபிக்க ஊக்குவியுங்கள்.

## பாடம் - 20

## செபிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள்

**தேர்ச்சி 5.0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.5.2** : இடைவிடாமல் நாள் தோறும் செபிப்பர்.

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- இயேசு செபித்த சந்தர்ப்பங்களை விளக்குவர்.
- எந்தவொரு அலுவல்களையும் செய்ய முன்னர் செபிக்க வேண்டு மென்பதை ஏற்றுக்கொள்வர்.
- திருச்சபையின் மரபு வழிச்செபங்களை மனப்பாடமாக உச்சரிப்பர்.
- திருச்சயின் மரபு வழிச்செபங்களை விசுவாசத்துடன் உச்சரிப்பர்.
- பிறர் கருத்துகளுக்குச் செவிமடுப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- பக்தியோடு செபிக்கும் பிள்ளையின் படத்தைக் காட்சிப் படுத்தி பின் வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - செபிக்கும்போது மனதை இறைவன் பால் ஈடுபடுத்த வேண்டும்.
  - செபிக்கும்போது யாரோடு பேசுகிறோம் என்று நினைத்தல் வேண்டும்.
  - இறைவனின் விருப்பத்துக்கு கீழ்படிய வேண்டும்.
  - செபிக்கும்போது எவ்வித தடங்கல் ஏற்படினும் பின் வாங்கக் கூடாது.

(15 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தோ அல்லது பிரிக்காமலோ இணைப்பு 1 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தையும் திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாட்டைப் பெற்றுக் கொடுங்கள்.
- மாணவர்களைக் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(55 நிமிடங்கள்)

படி 3

- ஓவ்வொரு குழுவினரும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் குழுவுக்கு, முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
  - இயேசு கிறிஸ்து கீழ்க் காணப்படும் சந்தர்ப்பங்களில் செபித்தார்.
    - திருமுழுக்கு பெறும் போது (லூக்கா 3: 21)
    - குணமளிக்க முன்னர் (லுக்கா 5: 10)
    - திருதூதரை தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் (லூக்கா 6: 12)
    - பேதுருவின் அறிக்கைக்கு முன்னர் (லுக்கா 9: 18, பிலிப்புச் செசரியாவில்)
    - தோற்றம் மாறுவதற்கு முன்னர் (லுக்கா 9: 28)
    - இறைவனிடம் வேண்டக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னர் (லுக்கா 11: 1)
    - சிலுவை மரத்தில் (லுக்கா 23: 34-46)
  - ஓவ்வொரு நாளும் இடைவிடாது செபிக்க வேண்டும்.
  - முக்கியமாக கீழ்க் காணும் வேளைகளில் செபிக்க வேண்டும்.
    - காலையில் எழுந்தவுடன் - காலை ஆராதனை
    - பாடசாலைக்கு செல்ல முன் அல்லது பயணமொன்றை மேற்கொள்ள முன் - காவல் துதரின் செபம்
    - உணவுக்கு முன் - உணவை ஆசீர்வதித்தல்
    - உண்ட பின் - உணவுக்கு நன்றி
    - விசேட அலுவல்களை ஆரம்பிப்பதற்கு முன் - தூய ஆவியின் செபம்
    - இரவு நித்திரைக்குச் செல்ல முன் - இரவு ஆராதனை
  - மேற் கூறப்பட்ட செபங்களை மனனஞ் செய்ய வேண்டுமென்பதை கவனத்திற் கொள்ளுங்கள்.(வேறு ஒரு தினத்தில் மனனஞ் செய்த இச் செபங்களைக் கேளுங்கள்.)
  - உடலுக்கு சுவாசம் எவ்வாறோ ஆன்மாவுக்கு செபமும் அவ்வாறேயாகும்.
  - நாம் சுவாசிப்பது போன்றே செபத்தையும் மறக்கக் கூடாது.

(50 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாடு (லூக்கா 3: 21, 5: 6, 6: 12, 9: 18,28, 11:1, 23:34,46)
- பிள்ளைகளின் செபப் புத்தகம் (செபச் சொண்டு)- காலை ஆராதனை, காவல் தூதரின் செபம், உணவு உண்ண முன் ஆசீர் செபம், உணவு உண்ட பின் நன்றிச் செபம், தூய ஆவியின் செபம், இரவு ஆராதனை
- பக்தியோடு செபிக்கும் பிள்ளையின் படம்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

### இணைப்பு 1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- 1ஆம் குழுவின் செயற்பாட்டு பத்திரம்
  - லுக்கா 3: 21-22 வரையிலான திருவிவிலியப் பகுதியை வாசித்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
  - திருவிவிலியப் பகுதியால் வெளிக்கொணரப்படும் விசேட சம்பவம் என்ன?
  - "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" எனும் திருவிவிலிய வசனம் எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
  - வேண்டிய திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட காலைச் செபம் எது?
  - இச் செபத்தை வகுப்பின் முன் உமக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் சொல்லத் தயாராகுங்கள்.

- 2ஆம் குழுவின் செயற்பாட்டு பத்திரம்
    - லூக்கா 5: 12-16 வரையிலான திருவிவிலியப் பகுதியை வாசித்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
    - திருவிவிலியப் பகுதியால் வெளிக்கொணரப்படும் விசேட சம்பவம் என்ன?
    - இச் சம்பவத்தில் இறுதியாக என்ன நிகழ்ந்தது?
    - பாடசாலைக்குச் செல்ல முன் அல்லது வேறொரு பயணம் மேற்கொள்ள முன் செபிக்கக் கூடிய திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செபம் எது?
    - இச் செபத்தை வகுப்பின் முன் உமக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் சொல்லத் தயாராகுங்கள்.

- 3ஆம் குழுவின் செயற்பாட்டு பத்திரம்
    - லூக்கா 6: 12-16 வரையிலான திருவிவிலியப் பகுதியை வாசித்து கருத்துக்களைப் பகிர்ந்துக் கொள்ளுங்கள்.
    - திருவிவிலியப் பகுதியால் வெளிக்கொணரப்படும் விசேட சம்பவம் என்ன?
    - இச் சம்பவத்தில் முதலில் நிகழ்ந்தது என்ன?
    - விசேட அலுவல்களை ஆரம்பிக்க முன்னர் செபிக்க திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செபம் எது?
    - இச் செபத்தை வகுப்பின் முன்னிலையில் மனப் பாடமாக , உமக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் செபிக்கத் தயாராகுங்கள்.

- 4ஆம் குழுவின் செயற்பாட்டு பத்திரம்
    - லூக்கா 9: 18-20 வரையிலான திருவிவிலியப் பகுதியை வாசித்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
    - திருவிவிலியப் பகுதியால் வெளிக்கொணரப்படும் விசேட சம்பவம் என்ன?
    - திருத்தூதர்கள் இயேசுவோடு இருந்த வேளையில் அவர் என்ன செய்து கொண்டு இருந்தார்?
    - உணவு அருந்த முன்னரும், உணவு அருந்திய பின்னரும் செபிக்க திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செபம் எது?
    - இச் செபத்தை வகுப்பின் முன்னிலையில் மனப் பாடமாக , உமக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் செபிக்கத் தயாராகுங்கள்.

- 5ஆம் குழுவின் செயற்பாட்டு பத்திரம்
    - லூக்கா 9: 28-36 வரையிலான திருவிவிலியப் பகுதியை வாசித்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
    - திருவிவிலியப் பகுதியால் வெளிக்கொணரப்படும் விசேட சம்பவம் என்ன?
    - இயேசு கிறிஸ்து பேதுரு, யோவான், யாக்கோபு ஆகியோரை அழைத்து தபோர் மலை மேல் ஏறி என்ன செய்தார்?
    - இரவு நித்திரைக்கு செல்வதற்கு முன் செபிக்க திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செபம் எது?
    - இச் செபத்தை வகுப்பின் முன்னிலையில் மனப் பாடமாக , உமக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் செபிக்கத் தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

குடும்பத்தினர் எல்லோரும் எப்பொழுதும் உணவுக்கு முன் இறை ஆசீரையும் உணவுக்கப் பின் நன்றிச் செபத்தையும் சொல்லவும்.

## பாடம் - 21

## இயேசு கற்பித்த செபம்

**தேர்ச்சி 5.0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.5.3** : இயேசு கற்பித்த செபத்தை அர்த்தமுள்ள முறையில் செபிப்பர்.

**பாடவேளை** : 01

**கற்றல் பேறுகள்** :

- இயேசு கற்பித்த செபத்தைப் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.
- இயேசு கற்பித்த செபத்தைப் பக்தியோடு சொல்வதற்கு முயற்சிப்பர்.
- இயேசு கற்பித்த செபத்தைப் பக்தியோடு செபிப்பர்.
- இயேசு கற்பித்த செபத்தைப் சொல்லும் போது சரியான நிலைகளை வெளிக்காடடுவர்.
- தீமை செய்யாதிருக்க செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- "பரலோகத்தில் இருக்கின்ற எம் பிதாவே, உம் நாமம் அர்ச்சிக்கப்படுவதாக ...." என்ற செபத்தைப் பாடுதல் அல்லது செவிமடுப்பதற்கு ஒழுங்குச் செய்தல், அதில் கூறப்படுவது என்ன என்பதைப் பற்றி கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - பாடலில் கூறப்படுகிற செபம் (இயேசு கற்பித்த செபம்)
  - இயேசு கற்பித்த ஒரே ஒரு செபம் இதுவாகும்.

(07 நிமிடங்கள்)

படி 2

- இணைப்பு 1 இல் உள்ளடக்கப்பட்ட கருத்துக்களை மாணவருக்கு காட்சிப்படுத்தி அதன் வழியாக கீழ்க்காணப்படும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடத்துங்கள்.
- ஆக்கத்திலுள்ள விசேட இலட்சணங்கள் எவையென மத்தேயு 6: 9-13 வரை பகுதியை வாசித்து கலந்துரையாடுங்கள்.
- குறிப்பிட்ட திருவிவிலியப் பகுதியை ஒரு மாணவரைக் கொண்டு வாசிக்கவும். (முன்வைப்பு இல்லை)
  - இயேசு கற்பித்த செபம் இருக்கின்ற நற்செய்தி 2 ஆகும்.
    - மத்தேயு நற்செய்தி 6: 9-13
    - லூக்கா நற்செய்தி 11: 2-4
  - இயேசு கற்பித்த செபத்தின் அமைப்பு
  - இச் செபத்தை உச்சரிக்கும் போது சரியான வழிமுறையைப் பயன் படுத்திச் செபிக்க வேண்டும். (இரு கைகளையும் உயர்த்தல், இரு கைகளையும் நீட்டுதல் போன்றவை)

(15 நிமிடங்கள்)

படி 3

- இயேசு கற்பித்த செபம் எழுதப்பட்ட சுவரொட்டியைக் காட்சிப்படுத்தி, மாணவர்கள் சரியான வழி முறைகளைப் பயன் படுத்தி பக்தியோடு செபிக்க வழிவகுத்தல்.
- ஆசிரியர் பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
    - இயேசு கற்பித்த செபத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன.
        - புகழ்ச்சிகள் மூன்றாகும்
            - உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக
            - உம்முடைய இராச்சியம் வருக
            - உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல் பூமியிலும் செய்யப்படுவதாக
        - ஆன்மீக, சரீர வேண்டுதல்கள் நான்கு ஆகும்.
            - எமது அனுதின உணவை எமக்கு இன்று அளித்தருளும்
            - எமக்குத் தீமை செய்பவர்களை நாம் பொறுப்பது போல எங்கள் பாவங்களையும் பொறுத்தருளும்.
            - எங்களைச் சோதனையில் விழவிடாதேயும்
            - தீமைகளிலிருந்து எம்மை இரட்சித்துக்கொள்ளும்
    - இயேசு கற்பித்த செபத்தை மனனஞ் செய்து பக்தியோடு செபிக்க வேண்டும். (வேறு ஒரு நாளில் மாணவர்கள் மனனஞ் செய்ததைக் கேட்கவும்)

(18 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாடு (மத்தேயு 6: 9-13, லூாக்கா 11: 2-4)
- இயேசு கற்பித்த செபம் எழுதப்பட்ட சுவரொட்டி
- “பரலோகத்தில் இருக்கின்ற எம் பிதாவே, உம் நாமம் அர்ச்சிக்கப்படுவதாக ….” என்ற பாடலுள்ள ஒலிநாடா, பாடல் புத்தகம்
- ஒலிப் பேழை (Cassette Player)
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**சுவரொட்டி**

- பாடல் வரிகள் : நாசரேத்தின் இயேசுவுடையது.
- சிந்தனை : நாசரேத்தின் இயேசுவுடையது.
- எண்ணக்கரு : நாசரேத்தின் இயேசுவுடையது.
- வெளிப்பாடு : இயேசுவின் திருத்தூதருடையதாகும்.
- அன்றாடசெபம் : எங்களுடையது

**வீட்டுச் சூழலில் :**

எப்பொழுதும் இயேசு கற்பித்த செபத்தை மனனம் செய்து, பிழையின்றி, பக்தியோடு செபிக்க வழிநடத்துங்கள்.

## பாடம் - 22

# அருள் நிறை மரியே

**தேர்ச்சி 5.0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.5.4** : அருள் நிறை மரியே என்று செபத்தை பக்தியுடன் செபிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள் :**

- மரியன்னையை அழைக்கும் வேறு பெயர்களைக் கோவைப்படுத்துவர்.
- மரியன்னையின் காட்சிகளை விசுவசிப்பர்.
- கிறிஸ்தவ வழிபாடுகளின் போது மரியன்னைக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.
- மரியன்னைக்குரிய மரியாதையைச் செலுத்துவர்.
- மரியன்னையைப் போல் பிறருக்காகப் பரிந்து பேசுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- வானதுாதர் கபிரியேல் மரியாளுக்கு மங்கள வார்த்தை கூறும் காட்சியைக் காட்டும் சுவரொட்டியைக் காட்சிப் படுத்தி, அருள் நிறை மரியே பாடலைப் பாட அல்லது செவிமடுக்க ஒழுங்குச் செய்யவும்.
- பாடலிலும், படத்திலும் கூறப்படும், பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - படத்தில் காணப்படும் இருவர்
  - அவர்கள் செய்பவை
  - அவர்கள் கூறியவை

(16 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, 2 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(34 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு மாணவருக்கும் அல்லது ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் குழுவுக்கு, முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
  - அருள் நிறை மரியே செபத்தில் இரு பிரிவுகள் உள்ளன.
    - மங்கள வார்த்தைக் கூறல் (லூக்கா 1: 26-38)
    - திருச்சபை இணைத்த பகுதி
  - மரியன்னையின் காட்சிகள்
  - கிறிஸ்தவ வழிபாடுகளில் மரியன்னைக்கு உரித்தாகும் முக்கியத்துவம்
  - மரியன்னையின் பெயர்கள்

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாடு (லூக்கா 1: 26-38)
- பாடல் புத்தகம் அல்லது அருள் நிறை மரியே உள்ள ஒலி நாடா
- ஒலிப் பேழை (Cassette Player)
- வானதூதர் கபிரியேல் மரியாளுக்கு மங்கள வார்த்தை கூறும் காட்சியைக் காட்டும் சுவரொட்டி
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஒருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- உங்கள் குழுவினர் பெற்ற ஆய்வுப் பத்திரத்திலுள்ள திருவிவிலியப் பகுதியையும், ஏனைய கருத்துக்களையும் நன்றாக வாசியுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை குழுவிலுள்ள அங்கத்தவரோடு கலந்துரையாடுங்கள்.
- விளங்காத கருத்துக்களை விளங்கியவர்களிடம் கேட்டறியுங்கள்.
- நீங்கள் இச் செயற்பாட்டினூடாக கோவைப் படுத்திய விடயங்களை அடிப்படையாக் கொண்டு ‘‘மரியன்னை’’ யைப் பற்றி ஆக்கப்பூர்வமான முன்வைப்பொன்றுக்குத் தாயாராகுங்கள். (முன் வைப்பிற்காக, உரையாடல், நாடகம், தாளலயப் பாட்டு, சுவரொட்டி ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்)

**இணைப்பு 2**

**ஆய்வுப் பத்திரம்**

- புனித லூக்கா – 1: 26-38
- மனித உரு எடுத்த தமது திருமகனும் எமது மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் அன்னையாவதற்கு இறைவனால் தெரிவுச் செய்யப்பட்ட மாசில்லா கன்னிகை மரியாவாவார்.

- ''நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு ஆகக்கடவது'' என்று கூறி அவர் அச் செய்தியை விரும்பி ஏற்றுக் கொண்டு இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் சிலுவை வரையிலான பயணத்திலும் அவருக்குப் பின்னால் நின்று மீட்பின் பணிக்கு பங்களிப்புச் செய்தார்.
- மரியன்னை செபமாலையை கையிலேந்தியவாறு எத்தனையோ முறை காட்சி கொடுத்துள்ளதோடு, அச் சந்தர்ப்பங்களில் மூன்று முறை செபமாலையை செபிக்கும் படி கூறியுள்ளார்.
    - 13 வது நுற்றாண்டில் ஸ்பானிய இன டொமினிக் குஸ்மன் என்ற வாலிப குருவுக்கு மரியாள் காட்சி கொடுத்து செபமாலைப் பக்தியைக் கற்பித்தல்.
    - கி.பி. 1858 இல் பிரான்ஸின் லூர்து நகரில் பெர்னதெத் எனும் சிறுமிக்குக் காட்சி கொடுத்து செபமாலை பக்தியின் உன்னதத்தை எடுத்துரைத்துள்ளார்.
    - கி.பி. 1917 இல் போர்த்துகலில் பாத்திமா நகரில் லூசி, பிரான்ஸிஸ்கோ, ஜஸிந்தா ஆகிய மூன்று பிள்ளைகளுக்கு செபமாலை சொல்லுமாறு அறிவுறுத்தியுள்ளார்.
- இக்காட்சிகளின் மூலம் எப்போதும் செபமாலை சொல்லும்படியும், பாவிகள் மனந்திரும்புவதற்காக ஒறுத்தல் முயற்சிகள் செய்யும்படியும் உலக மக்கள் அனைவரையும் மரியாள் அழைக்கின்றார்.
- இயேசுவின் தாயாகும் வரத்தைப் பெற்ற மரியாள், மனித இனத்தில் எவரும் பெறாத வரம் மரியாளுக்கு உரித்தானது. மனிதத்துவத்தையும் இறைத்தன்மையையும் ஒன்றித்து இயேசு கிறிஸ்துவிற்குப் பின் உயரிய மரியாதை மரியாளுக்கே உரித்தானது.
- மரியன்னையைப் பல பெயர்களால் அழைப்பார்கள், அவையாவன:
    - லூர்து அன்னை
    - பாத்திமா மாதா
    - வேளாங்கன்னி மாதா
    - இலங்கையின் இராக்கினி
    - ரோஜா மாதா
    - காணிக்கை மாதா
    - மருதமடு மாதா
    - மாத்தறை மாதா
    - சதாசகாய மாதா
    - சித்தாத்திரை மாதா
    - ஜெபமாலை மாதா
    - பிள்ளைத்தாச்சி மாதா

    (இவை தவிர உலகம் முழுதும் பல பெயர்கள் உள்ளன.)
- இலங்கையில் அனேக ஆலயங்கள் மரியாளின் பெயரில் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

**வீட்டுச் சூழலில் :**

தினமும் குடும்பத்தில் அனைவரும் ஒன்று கூடி செபமாலை சொல்லுங்கள்.

## பாடம் - 23

## பொதுச் செபங்கள்

**தேர்ச்சி 5.0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.5.5** : திருச்சபையின் பொது செபங்களை தமது அன்றாட வாழ்வில் செபிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- பொதுச் செபங்கள் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவர்.
- பொதுச்செபங்கள் மனனஞ் செய்து வைத்திருப்பது வாழ்க்கைக்கு மிக பயனுள்ளதாய் அமையும் என்பதனை ஏற்றுக் கொள்வர்.
- குறிப்பிட்ட ஒரு செபத்தை மனனஞ் செய்து பக்தியோடு செபிப்பர்.
- அன்றாட வாழ்வில் செபத்தைத் தொடர்புப் படுத்திக் கொள்வர்.
- ஓன்றுகூடி கூட்டமாகச் செபிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- பொதுச் செபங்கள் பற்றி கேட்டறிந்து கரும்பலகையில் அவற்றை எழுதுங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
  - பொதுவாக செபிக்கும் போது உரத்து சத்தமாகச் சொல்ல வேண்டும்.
  - பொது செபங்களை மனனஞ் செய்திருப்போமாயின் தேவைப்படும் எவ்வேளையிலும் ஒன்று கூடிச் செபிக்கலாம்.
  - முழங்காலை மடிப்பதன் வழியாகவும், முழங்கால் படியிடுவதன் வழியாகவும் எமது மரியாதையையும், கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்துகிறோம்.
  - எழுந்து நிற்பதன் வழியாக எமது மகிழ்ச்சியையும், இறைவனுடைய விருப்பத்தை நிறைவேற்ற உள்ள விருப்பத்தையும் வெளிப்படுத்துகிறோம்.
  - இரு கைகளைக் கூப்புகையில் எமது கவனத்தையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றோம்.
  - மார்பில் தட்டுவதனால், நாம் தவறிழைத்தோம் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

(25 நிமிடங்கள்)

படி 2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் இணைப்பு 1, .2 ஐப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையாயின் குழுக்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- குழுச் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றைப் பயன் படுத்தலாம்.

(28 நிமிடங்கள்)

படி 3

- ஒவ்வொரு மாணவருக்கும் அல்லது ஒவ்வொரு குழுவினருக்கும் தமது செயற்பாடுகளின் இறுதி ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் விளக்கமளிக்க முன் வரும் குழுவுக்கு, முதல் வாய்ப்பினை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கரும்பலகையில் எழுதியவாறோ அல்லது வேறு தரவிருத்தி உள்ளீடுகளைப் (சுவரொட்டி, பக்கப் புரட்டி, செருகல் அட்டை ஆகியன) பயன் படுத்தியோ, பாடத் தொகுப்பினை விளக்குங்கள்.
    - திருத்தூதர்களின் விசுவாசப் பிரமாணத்தில் 12 உண்மைகள் அடங்கியுள்ளன.
    - இயேசு மனுவுரு எடுத்தல் மூவேளைச் செபத்தில் அடங்குகின்றது.
    - தினமும் காலை 5.30, பகல் 12.00 மணி, மாலை 6.30 ஆகிய நேரங்களில் மூவேளைச் செபம் சொல்லப்படுகிறது.
    - பாஸ்கா கால மூவேளைச் செபத்தில் இயேசுவின் உயிர்ப்பைப் பற்றிக் கூறப்படுகிறது. அவை சொல்லும் சந்தர்ப்பங்கள்.
    - உத்தம மனஸ்தாபச் செபம் சொல்லும் சந்தர்ப்பங்கள்.
    - இவ் எல்லாச் செபங்களையும் மனனஞ் செய்து ஞாபகத்தில் வைத்திருப்பதினால் தினமும் செபிக்கையில் அவை பயனள்ளதாய் அமைகின்றன.

(27 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- மோட்ச பாதை செபப் புத்தகம்
- டிமைன் தாள், பிளாற்றினம் பேனா
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

**குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்**

- உங்கள் குழுவுக்குத் தலைவர் ஓருவரை நியமியுங்கள். (முன்பு தலைவராக இருக்காத ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.)
- ‘மோட்ச பாதை’’ எனும் செபப்புத்தகத்தைப் புரட்டி பின் வரும் செபங்களை வாசியுங்கள்.
    - திருதுாதர்களின் விசுவாசப் பிரமாணம்
    - மூவேளைச் செபம்
    - பாஸ்கு கால மூவேளைச் செபம்
    - திருத்துவ ஸ்தோத்திரம்
    - உத்தம மனஸ்தாபம்
    - மிக்கேல் வானதுாதரின் செபம்
    - பாவ மன்னிப்புச் செபம்
- உங்களுக்குக் கிடைத்துள்ள டிமைன் தாள், பிளாற்றினம் பேனா ஆகியவற்றைப் பயன் படுத்தி ஒரு பக்கம் மட்டும் அழகான தெளிவான கையெழுத்தில் மேற் கூறப்பட்ட செபமொன்றை எழுதுங்கள்.
- ஆசிரியரின் ஆலோசனையின் படி உங்களுக்குக் கிடைக்கும் ஒரு செபத்தை குழுவாக ஒன்று கூடி சொல்வதற்கு தயாராகுங்கள்.

**வீட்டுச் சூழலில் :**

பொதுச் செபங்களை மனனஞ் செய்யுங்கள்.

## பாடம் - 24

## செபங்களை உருவாக்குவோம்

**தேர்ச்சி 5.0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.5.6** : உள்ளத்தால் எழும் செபங்களை இறைவனுக்கு ஒப்புக்கொடுப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றல் பேறுகள்** :

- செப உதவி தேவைப்படும் அனைவருக்காகவும் செபித்தல் கிறிஸ்தவ கடமை என்பதை வெளிப்படுத்துவர்.
- எப்பொழுதும் இறைப் புகழ்ச்சியில் ஈடுபட வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- செப வகைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கி ஆக்கமொன்றை தயாரிப்பர்.
- இதயத்திலிருந்து வரும் செபங்களை அன்றாட வாழ்வில் பயன் படுத்துவர்.
- தீமை செய்பவர்களுக்காகச் செபிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- இணைப்பு 2 இல் உள்ள சம்பவங்களை வகுப்பில் முன்வையுங்கள்.
- இதன் வழியாக பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - மேற்கூறப்பட்ட கதைக்கேற்ப எமது செபம் எவ்வாறு அமைய வேண்டும்
    - உதவி தேவைப்படும் அனைவருக்காகவும் எந்தவொரு பேதமுமின்றி செபித்தல் கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும்.
    - எமது பகைவரை அன்பு செய்ய வெண்டும்.

(20 நிமிடங்கள்)

படி 2

- ஒவ்வொரு மாணவருக்கும் இணைப்பு 1 ஐயும் சீட்டிழுக்கும் பெட்டியிலிருந்து ஒரு சீட்டையும் பெற்றுக் கொடுங்கள்.
- அந்த தலைப்பிற்கேற்ப மாணவர்களை ஒரு செபம் ஒன்றை ஆக்குவதற்கு சந்தர்ப்பம் அளியுங்கள்.
- தேவையாயின் ஆசிரியரின் வழிகாட்டலை வழங்கலாம்.
- மாணவர்களின் செயற்பாடுகளை கணிப்பிட்டு, மூன்றாம் படிமுறையில் அவற்றை பயன் படுத்தலாம்.

(30 நிமிடங்கள்)

படி 3

- எல்லாவகையான செபங்களையும் எழுமாற்றாக மாணவர்கள் தெரிவு செய்து அந்தந்த மாணவர்கள் தாம் ஆக்கிய செபத்தை வகுப்பில் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் அளியுங்கள்.
- அந்தந்த செபங்களில் உள்ள குறைகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரக் கூடிய வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
    - புகழ்ச்சி, நன்றி கூறல், (பாவ) மன்னிப்புக் கேட்டல், வேண்டுதல்கள் என செபங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
    - திருவிவிலியத்தில் திருப்பாடல் நூலை எமது செபப்புத்தகமாக்கிக் கொள்ளலாம்.
    - அந்தந்த செப வகைகளுக்குரிய செபங்கள் திருப்பாடல் நூலில் காணப்படுகின்றது.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம் (திருப்பாடல்)
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

### இணைப்பு 1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்

- வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப செபவகைகளை சீட்டுகளில் எழுதுங்கள். (புகழ்ச்சி, நன்றி, மன்னிப்பு, கேட்டல், வேண்டுதல்)
- சீட்டுத் துண்டுகளாக உருட்டி நன்றாகக் கலந்து ஒரு பெட்டிக்குள் இடுங்கள்.
- பெட்டியிலுள்ள கலக்கப்பட்ட துண்டுகளில் ஒன்றை மாணவர்கள் தேர்ந்தெடுத்து செப ஆக்கத்தை செய்வதற்கு சந்தர்ப்பம் அளியுங்கள்.

### இணைப்பு 2

### ஆய்வுப் பத்திரம்

### உள்ளத்தால் எழும் செபங்கள்

ஒரு சனிக்கிழமை பின்னேரம் பங்குத் தந்தை ஆலய முன்றலில் சிந்தனையுடன் நடந்து கொண்டிருந்தார். அடுத்த நாள் ஞாயிறு திருப்பலியின் போது அருளுரை ஊடாக, விசுவாசிகளுக்கு வழிகாட்டுவதற்குத் தேவையான தகவல்களைத் திரட்டுவதற்காக அவ்வாறு நடந்துக்கொண்டிருந்தார்.

இவ்வாறு நடந்துக் கொண்டிருக்கையில், அவர் ஆலயத்தில் இருந்த கிறிஸ்துவின் திருச்சுரூபத்தில் வெள்ளை துணியினால் ஒரு பொருத்தனைக் கட்டியிருந்தைக் கண்டார். அவர் அதனை அவிழ்த்துப் பார்த்தார். வெள்ளைக் தாளில் சுற்றப்பட்ட இரண்டு ரூபா அங்கிருந்தது. வெள்ளைக் தாளில் பல வேண்டுதல்கள் எழுதப்பட்டிருந்தன.

“எமது எதிரிகளை...... மேலும் சந்தோஷமாக வாழ இடமளிக்காதேயுங்கள். நோய்வாய்ப்பட்டிருக்கும் அவரது மனைவிக்குச் சுகமளிக்காதேயுங்கள். இவை உமது நாமத்தினால் நடக்கட்டும்.” ஆமென்.

இவற்றைச் செய்வதற்கான கூலி இரண்டு ரூபா.

**வீட்டுச் சூழலில் :**

உங்கள் சகோதர்களுக்காகச் செபியுங்கள்.

# பாடம் - 25

# தியானம்

**தேர்ச்சி 5.0** : செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.5.7** : நற்செய்தியை அடிப்படையாகக் கொண்டு தியானம் செய்வர்.

**பாடவேளை** : 01

**கற்றல் பேறுகள்** :

- திருவிவிலியத்தை அடிப்படையாக கொண்ட தியான ஒழுங்கினை கூறுவர்.
- தியானத்திற்காக மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- திருவிவிலியத்தை அடிப்படையாக கொண்டு தியானத்தில் ஈடுப்படுவர்.
- அன்றாடம் தியானிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

படி 1

- பிள்ளைகளைப் பொருத்தமான ஒரு இடத்துக்குத் தியானம் செய்ய அழைத்துச் செல்லுங்கள்.
- மேசையின் மேல் வெள்ளைத் துணியை விரித்து அதன் மேல் திருவிவிலியத்தை (தொடக்க நூல் 1: 26-27) பகுதியைப் புரட்டி ஏற்றி வையுங்கள்.
- திருவிவிலியத்திற்கு முன்பாக ஒரு விளக்கை ஏற்றி வையுங்கள்.
- மாணவர்கள் தியானம் செய்யும் இடத்திற்கு வெளியே வரிசையாக நிற்கும் படி செய்யுங்கள்.
- பின்னர் (இறைவன் எமக்கு தந்த) எனும் பாடலை பாடிக் கொண்டு மரியாதையாகவும் வரிசையாகவும் வந்து, திருவிவிலியத்தை வணங்கி வகுப்பறையினுள் அரை வட்டமாக வசதியாக அமரும் படி செய்யுங்கள்.
- பாடலின் இறுதியில் ஆசிரியர் தொடக்க நூல் 1: 26-27 பகுதியை வாசித்து, சற்று நேரம் அமைதியாக இருந்து, பின் திருவிவிலியத்தை உயர்த்தி, பிடித்து, ''இது இறைவனின் அருள் வாக்கு'' எனக் கூறி முத்தமிட்டு உரிய இடத்தில் வையுங்கள்.
- பின்னர் மாணவர்களை கீழ்க்காணப்படும் படிகளின் ஊடாக சுருக்கமான, தியானத்தில் ஈடுப்படுத்துங்கள்.
    - நாம் அனைவரும் கண்களை மூடிக் கொள்ளுவோம்.
    - அயலில் கேட்கும் ஒலிகளுக்குச் செவிமடுப்போம்.
    - எமக்கு மிக அண்மையில் கேட்கும் ஒலிகளுக்குச் செவிமடுப்போம்.
    - எமது சுவாசத்தில் கவனம் செலுத்துவோம்.
    - நாம் மூச்சை மேலே எடுக்கம் போது ''இயேசு'' என்று மனதிற்குள் கூறுவோம்.
    - நாம் மூச்சை வெளியிடும் போது, நம் தீய பழக்கங்கள் வெளியேறுவதாக நினைப்போம். (பல முறைகள் இவ்வாறு செய்யுங்கள்.)
    - பின்னர் ஒரு சிறு தியானத்தில் ஈடுபடுங்கள்.
        - இறைவனின் சாயலாக எம்மை நாம் பார்ப்பது எப்படி?
        - நீங்கள் உங்களை மதிக்கிறீர்களா? ஆம்..ஏன்? இல்லை... ஏன்?
        - உங்கள் நற்குணங்களை நினையுங்கள்.
        - உங்கள் தீயகுணங்களை நினையுங்கள்.
        - அவற்றில் இருந்து மீள திடங்கொள்ளுங்கள்

- இறை தந்தை எல்லோருக்கும் பற்பல ஆற்றல்களையும் திறமைகளையும் கொடுத்துள்ளார். அவ்வாறான எதுவுமே இல்லாதவர்கள் எம்மத்தியில் இல்லை. எனினும் சில வேளைகளில் எமக்குள்ளே இருக்கும் ஆற்றல்களை நாம் தேடிப்பார்ப்பதில்லை. அவற்யை வளர்த்துக் கொள்ள முயற்சி எடுப்பதில்லை.

  நாம் திறமைகளைப் பெற்றுள்ளது, எமக்கு மதிப்பு மரியாதைப் பெறுவதற்கோ அல்லது சுயநலமாக தமது நலனுக்காக பயன்படுத்தவோ அல்ல. இறைவன் உலகைப் படைத்து முழுமையடைய செய்யும் பொறுப்பை எமக்களித்துள்ளார். இச் செயல்பாட்டிற்காக அவர் எமக்கு அநேக ஆற்றல்களையும், அறிவையும் ஞானத்தையும் தந்துள்ளார்.

  வேறு சிலர் தமக்கு கிடைத்துள்ள அறிவு, ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதில்லை. தமது அழகிய காலத்தை, பிள்ளைப் பருவத்தை வீணாக்கிக் கொள்வர். அது எம்மால் இறை தந்தைக்கும், எமது சகோதர சகோதரிகளுக்கும் அதே போன்றே எமக்கே நாம் செய்துக் கொள்ளும் துரோகமாகும். நாம் யாதேனும் ஒன்றை செய்யும் போது அது வெற்றியளிக்காமல் போகலாம். உதாரணமாக பரீட்சையில் சித்தியடையாமல் இருக்கலாம். எனினும் அதைப் பற்றி விரக்தியடையாது மீண்டும் மீண்டும் முன்னோக்கிச் செல்ல முயற்சிக்க வேண்டும். அப்போது எமது வாழ்க்கையின் இலட்சியங்களை நோக்கிச் செல்ல முடியும். இயேசுவை உங்கள் வாழ்க்கையின் சிறந்த நண்பராக்கிக் கொள்ளுங்கள்.

  அன்பான இயேசுவே, எனது குறைகளை நீக்கிக் கொண்டு, பயமின்றி முன்னோக்கிச் செல்லவும், தோல்வியையும் தவறுகளையும் பாராட்டாது, உமக்குள்ளே எனது வாழ்வை கட்டியெழுயப்பவும், தூய ஆவியின் வல்லமையை எமக்குத் தந்தருளும், ஆமென்.

○ இப்போது எமக்கு உயிரைத் தந்த இறை தந்தைக்கு எமது அன்பை வெளிப்படுத்துவோம்.

○ மூச்சை மேலே இழுத்தல் ↑ இயேசு என மெதுவாக கூறுதல்.

○ மூச்சை கீழே விடுதல் ↓ தீமையான எண்ணங்கள் எம்மை விட்டு வெளியேறுகின்றன என நினைத்தல்.

○ எமக்கு மிக அண்மையில் உள்ள சத்தங்களுக்குச் செவிமடுப்போம்.

○ எம் அயலில் கேட்கும் சத்தங்களுக்குச் செவிமடுப்போம்.

○ இப்பொழுது மெதுவாக கண்களை திறவுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடு :**

- திருவிவிலியம்
- வெள்ளைத்துணி, தேங்காய் எண்ணெய் ஊற்றிய விளக்கு, தட்டு
- பாடல் புத்தகம்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

இத் தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**வீட்டுச் சூழலில் :**

உமது இல்லத்தில் திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு தியானம் செய்யுங்கள்.

- **கணணி பதிப்பு :** செல்வி. நா.வி. இராஜயோகினி
  செல்வி பிலிசியா பர்னாந்து
  திரு. டயஸ் அமரசிங்க
  திருமதி. டொறின் செல்வகுமார்